பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 07 திங்கட்கிழமை 23.08.2021 கதிர் 291

### இனிது ரகசியம் அல்ல!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உத்தேச புதுடில்லி விஜயம் குறித்து மீண்டும் பேசப்படுகின்றது.

கூட்டமைப்பின் புதுடில்லி விஜயமும் பிள்ளையார் கலியாணமும் ஒன்று போல. நாளைக்கு நடக்கும், நாளைக்கு பக்கம்02

# இலங்கையில் முதல் தடவையாக ஒரே நாளில் நான்காயிரத்துக்கும் மேற்பட்ட தொற்றாளர்கள்

## பேராபத்து நிலைமை என்கிறார் இராணுவத் தளபதி



இலங்கையில் அடையாளம் காணப்படும்நாளாந்தக்கொரோனாத்தொற்றாளர்களின் எண்ணிக்கை முதல் தடவையாக நேற்று 4 ஆயிரத்தைக் கடந்துள்ளது என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இது நாட்டின் பேராபத்து நிலைமையை எடுத்துக்காட்டுகின்றது எனச் சுட்டிக்காட்டிய அவர், பொதுமக்கள் ஊரடங்கு உத்தரவை மீறாமல் பொறுப்புணர்வுடன் நடக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

நாட்டில் கொரோனாத் தொற்று உறுதியான 4 ஆயிரத்து 282 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று 2

# நாட்டின் இந்தப் பேரவல நிலைக்கு கோட்டாபய அரசே முழுப்பொறுப்பு

## பிக்குகள் சொல்வதைக் கேட்டவர்கள் சுகாதாரத்துறையினரை மதிக்கவில்லை என்று சுரேஷ் பிறேமச்சந்திரன் குற்றச்சாட்டு



(எஸ்.நிதர்ஷன்)

பௌத்த துறவிகள் சொல்வதைக் கேட்கும் கோட்டாபய அரசு, சுகாதாரத்துறையினர் சொல்வதைக் கேட்காமல் – அவர்களை மதிக்காமல் – இருப்பது வருத்தத்துக்குரிய விடயமாகும். கொரோனாவின் தீவிரத்தால் நாட்டில் ஏற்பட்டுள்ள இந்தப் பேரவல நிலைமைக்கு கோட்டாபய அரசே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும்.

– இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார். 10

## வவுனியாவில் மேலும் 94 பேருக்குத் தொற்று

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் மேலும் 94 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் 10

## ஊடகவியலாளர் லாபிர் காலமானார்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட ஊடகவியலாளரும் எழுத்தாளருமான மீரா லெப்பை லாபிர் நேற்றுக் காலமானார். 2

## யாழில் 200 பேர் சாவு

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணத்தில் மேலும் 4 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம்போதனாவைத்தியசாலையில் 2

## இந்தியாவிலிருந்து நூறு தொன் ஒட்சிசனுடன் இலங்கையை வந்தடைந்துள்ளது 'சக்தி' கப்பல்

இந்தியாவின் விசாகப்பட்டினம் துறைமுகத்திலிருந்து 100 தொன் மருத்துவ திரவ ஒட்சிசனை ஏற்றிய இந்தியக் கடற்படையைச் சேர்ந்த 'சக்தி' எனும் கப்பல்கொழும்புத்துறைமுகத்தை நேற்றுப் பிற்பகல் வந்தடைந்துள்ளது.

குறித்த கப்பலை வரவேற்க, துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன மற்றும் இந்தியப் பிரதித் தூதுவர் வினோத் கே. ஜெகொப் ஆகியோர் கொழும்புத் துறைமுகம் சென்றிருந்தனர்.

இலங்கையால் இந்தியாவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஒட்சிசன் தொகையை ஏற்றிய குறித்த கப்பல், கடந்த வியாழக்கிழமை இந்தியாவின் விசாகப் பட்டினம் துறைமுகத்திலிருந்து இலங்கையை நோக்கிப் புறப்பட்டு நேற்று பிற்பகல் நாட்டை வந்தடைந்துள்ளது.

இதேவேளை, மேலும் 39 தொன் ஒட்சிசனைக் கொண்டு வருவதாற்காக இந்தியா 2

## மேலும் 183 பேர் மரணம்!

இலங்கையில் மேலும் 183 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல 2

### ஊரடங்கு வேளையில் யாழ்ப்பாணத்தில்

## மூவரைத் துரத்திச் சென்று சரமாரியான வாள்வெட்டு!

(எஸ்.நிதர்ஷன்)

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு கடுமையாக நடைமுறைப்படுத்தப் 2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடக்கும் என்று பார்த்துக் கொண்டு இருக்க வேண்டியதுதான்.

2019 ஜூனில் குறுகிய சில மணி நேர விஜயமாக - இலங்கைக்கு வந்தார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி. மாலை தீவில் ஒரு நாள் விஜயத்தை முடித்துக் கொண்டு புதுடில்லி திரும்பும் வழியில் ஒரு குறுகிய விசிட். அவ்வளவுதான்.

அப்போது, விமான நிலைய மண்டபத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் ஒரு சில நிமிட நேரம் 'ஹலோ' சொல்லி, கைலாகு கொடுத்து, உரையாடினார் இந்தியப் பிரதமர்.

*"இந்தக் குறுகிய சந்திப்பில் எதுவும் பேச முடியாது. புதுடில்லி வாருங்கள். பேசுவோம்."* - என்றார் பிரதமர் மோடி.

அந்த அழைப்பு இரண்டு வருடங்களும், இரண்டு மாதங்களும் கடந்தும் இன்னும் திறந்ததாக இருக்கின்றது. இன்னும் காரிய சாத்தியப்படவில்லை.

அண்மையில் கொழும்புக்கான இந்தியத் தூதுவர் பாக்லே இரண்டு தடவைகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தனைச் சந்தித்துப் பேசிவிட்டார்.

விரைவில் புதுடில்லிக்குப் போக வேண்டியிருக்கும் என்று தமது கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுவுக்கு சம்பந்தனும் கோடி காட்டியிருந்தார்.

இந்தப் பின்புலத்தில் அடுத்த மாதம் கூட்டமைப்பு புதுடில்லிக்குப் போகவிருக்கின்றது என கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று நேற்று செய்தி வெளியிட்டிருந்தது.

நடந்தால் சந்தோஷம்தான். ஆனால் எனக்கு என்னவோ 'நாளை பிள்ளையார் கல்யாணம்' என்பதும் 'கூட்டமைப்பு அடுத்த மாதம் புதுடில்லி போகும்' என்பதும் ஒரே மாதிரியான கூற்றுப் போன்றே படுகின்றது.

நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசர்களே...?

★ ★ ★

தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் நேற்று மூன்றரை மணி நேரம் ஒன்று கூடி மெய்நிகர் முறையில் பேசியிருக்கின்றார்கள் என்பது சந்தோஷமான சமாச்சாரம்தான். பேச்சின் முடிவில் ஏற்பாட்டாளரான ரெலோவின் பேச்சாளர் சுரேந்திரன் குருசாமி விடுத்த அறிக்கையும் வாசிக்கச் சந்தோஷமாகத்தான் இருந்தது.

ஆனால், அது 'பொழு' வைத்துத் தயாரிக்கப்பட்ட அறிக்கை போன்றுதான் தோன்றுகின்றது.

'தமிழ் மக்களின் அரசியல் விடயங்களில் ஒருமித்த நிலைப்பாட்டில் செயற்படுவதற்காகத் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் நேற்று ஒன்று கூடினர்' - என்று குறிப்பிட்ட அந்த அறிக்கை ஒருமித்த நிலைப்பாட்டில் செயற்பட அவர்கள் இணங்கினரா என்பது குறித்து ஒரு தெளிவைத் தரவில்லை.

ஆக, முதல் கட்டமாக நான்கு விடயங்களில் ஒருமித்துச் செயற்படுவதற்கு இணங்கியமை பற்றி மட்டுமே அதில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

அப்படியானால் எதிர்காலத்தில் இந்தத் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒருமித்த நிலைப்பாட்டில் செயற்பட்டு, அரசுடனும் சர்வதேசத்துடனும் தமிழர் பிரச்சினை தொடர்பான ஊடாட்டங்களில் ஒன்றுபட்டுக் காரியமாற்றுவதற்கு இணங்க மாட்டாவா, அதற்குச் சாத்தியமில்லையா என்ற ஒரு கேள்வியை நீங்கள் எழுப்புவது எனக்குப் புரிகின்றது.

இந்த மெய்நிகர் உரையாடல் தொடர்பில் எனக்கும் அது பற்றிய தேடுதல்தான் முக்கியமாகப்பட்டது. தேடினேன்.

கட்சித் தலைவர்கள் கூட்டம் என்பதால், ரெலோவின் இந்த முயற்சிக்கு - இதுவரையான கூட்டங்களுக்கு - கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் அழைக்கப்படவில்லை. நேற்றைய கூட்டமும் கூட அரைவழி போன கட்டத்தில்தான் சுமந்திரனை அழைக்கும் முடிவுக்கு கூட்டத்தில் பங்குபற்றியோர் வந்தனர். (கூட்டம் பற்றிய விவரமான செய்தி 10ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது.)

கூட்டத்தில் இடைநடுவில் அழைப்புக் கிடைத்தும் மறுப்பேதுமின்றி சுமந்திரன் கலந்து கொண்டார். அப்போதுதான் இந்தக் கட்சிகள் எல்லாம் ஒரு பொது நிலைப்பாடு எடுத்துச் செயற்பட முடியாதா என்ற கேள்வி சுமந்திரனிடம் முன் வைக்கப்பட்டது. அவர் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் சொன்ன பதில் இதுதான்:-

*"நீங்கள் எல்லோரும் கூட்டமைப்பில் இருந்தவர்கள்தான். கூட்டமைப்பின் நிலைப்பாடு 2010இலிருந்து ஒன்றுதான். அதில் எந்த மாற்றமும் இல்லை. மாற்றம் இருந்தால் சொல்லுங்கள். அதைத் திருத்தி பழைய இடத்துக்கு வரலாம். நாங்கள் அப்படி மாறவில்லை. ஒரே நிலைப்பாடுதான். ஒன்றுபட்ட நாட்டுக்குள் சமஷ்டி அடிப்படையில் அதிகாரப் பகிர்வுதான் எமது ஒரே முடிவு. அதைவிட்டு நாம் விலகவுமில்லை. விலகவும் மாட்டோம். விலகியிருந்தால் அதைச் சொல்லுங்கள். இந்த நிலைப்பாட்டை விட்டு விலகி வேறு நிலைக்குச் சென்றவர்கள் நீங்கள்தான். நீதியரசர் விக்னேஸ்வரன் எங்கள் கூட்டமைப்பில் தேர்தலில் நின்றுதான் 2013 இல் வென்றவர். இப்போது கூட்டாட்சி அரசமைப்புக்கு இணங்கும் அரசுடன் மட்டுமே பேச வேண்டும் என்ற நிபந்தனைப் பாணியில் அறிவிக்கின்றார். அப்படியாயின் எப்படி ஒன்றுபட்டு பொது நிலைப்பாட்டுக்கு நாம் வருவது? எங்கள் கருத்து ஒன்றுதான். கூட்டமைப்பு நிலைப்பாடு கடந்த பன்னிரண்டு வருடங்களாக ஒன்றுதான். அதில் எதையாவது நாம் விட்டு விலகியிருக்கின்றோம் என்று நீங்கள் கருதினால் சுட்டிக் காட்டுங்கள். திருத்திக் கொள்கின்றோம். அப்படி ஏதுமில்லை. கூட்டமைப்பில் நீங்கள் இருந்த போது அந்த நிலைப்பாட்டில்தான் இருந்தீர்கள். இப்போதுதான் வேறு வேறு தரப்புகளாக நின்று வேறு வேறு நிலைப்பாடுகளைப் பிரதிபலிக்கின்றீர்கள்.*

*"கூட்டமைப்பு தனது நிலைப்பாட்டை மாற்றவில்லை, மாற்றவும் மாட்டாது. அதுதான் பொது நிலைப்பாடு, கூட்டமைப்பின் அந்த நிலைப்பாட்டுக்கு நீங்கள் எல்லோரும் வருவதானால் - பழைய அந்த நிலைப்பாட்டுக்கு வாருங்கள். ஒன்றுபட்டுப் பயணிக்கலாம். அதை விடுத்து, கூட்டமைப்பை வேறு ஏதோ ஒரு பொது நிலைப்பாட்டுக்குப் புதிதாக வாருங்கள் என்ற மாதிரி நீங்கள் அழைப்பது அர்த்தமற்றது."* - என்று கூறியிருக்கின்றார் சுமந்திரன். அவரின் கருத்து நிலை யாது என்பது தெளிவானது.

*"கூட்டமைப்பின் கருத்து நிலைப்பாடு யாதோ அதுதான் பொது நிலைப்பாடு, அதற்கு வருவது என்றால் வாருங்கள். ஒன்றாவோம்."* - என்பதுதான் அது.

இனியும், பொது நிலைப்பாடு என்ற ஒன்றுக்கு சாத்தியம் இருக்கின்றது என நீங்கள் நம்புகின்றீர்களா?

எனக்கென்றால் கொஞ்சம் கஷ்டம் போலத்தான் படுகின்றது. நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே...?

-- மின்னல் --

## மேலும் 183 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

குணவர்தன உறுதிப்படுத்தியுள்ளார்.

இதையடுத்து நாட்டில் பதிவான கொரோனாச் சாவுகளின் மொத்த எண்ணிக்கை 7 ஆயிரத்து 366 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 183 பேரில் 107 ஆண்களும், 76 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதில் இரண்டு பெண்கள் 30 வயதுக்குட்பட்டவர். 27 ஆண்கள், 18 பெண்கள் என 45 பேர் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 136 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 107 ஆண்களும், 76 பெண்களும் அடங்குகின்றனர்.

## யாழில் 200 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிகிச்சை பெற்று வந்தவர்களான திருநெல்வேலி மேற்கைச் சேர்ந்த 78 வயதுடைய பெண் ஒருவரும், சண்டிலிப்பாயைச் சேர்ந்த 53 வயதுடைய பெண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

அதேவேளை, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை ஊடாக பி.சி.ஆர். பரிசோதனைக்காக மாதிரி அனுப்பப்பட்ட 62 வயதுடைய ஆண் ஒருவருக்கும், யாழ். போதனா வைத்தியசாலை ஊடாக பி.சி.ஆர். பரிசோதனைக்காக மாதிரி அனுப்பப்பட்ட 65 வயதுடைய ஆண் ஒருவருக்கும் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது என மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 200 ஆக உயர்வடைந்துள்ளது.

## இந்தியாவிலிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சென்ற 'சக்தி' எனும் அதே பெயரைக் கொண்ட இலங்கைக் கடற்படைக்குச் சொந்தமான கப்பல் இன்று காலை கொழும்பை வந்தடையவுள்ளது எனக் கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கப்பல் கடந்த 17ஆம் திகதி திருகோணமலை துறைமுகத்திலிருந்து புறப்பட்டு மறுநாள் 18 ஆம் திகதி சென்னைத் துறைமுகத்தை சென்றடைந்தது.

இலங்கையில் கொரோனா டெல்டா திரிபு தொற்றைக் கொண்ட தொற்றாளர்கள் நாளுக்கு நாள் அதிகரிப்பைத் தொடர்ந்து தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ள நோயாளர்களுக்கு அவசியமான ஒட்சிசன் தேவையை ஈடுசெய்ய குறித்த ஒட்சிசன் தொகை நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

## ஊடகவியலாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கலாபூசணம், தேசகீர்த்தி, தேச சக்தி, ஊடகச் சுடர், நிழல்படத் தாரகை ஆகிய விருதுகளைப் பெற்ற எம்.எல்.லாபிர் யாழ்.



ஊடக அமைய உப தலைவரும் முஸ்லிம் மீடியா போரத்தின், யாழ்.மாவட்ட இணைப்பாளராகவும், தமிழ்ப் பத்திரிகைகளின் செய்தியாளராகவும் சேவையாற்றினார்.

மானிப்பாய் வீதி, பெரிய முஹிதீன் ஜும்மா பள்ளிவாசலின் நம்பிக்கையாளர் சபைத் தலைவராகக் கடமையாற்றிய லாபிர், பிளவ்ஸ் ஹாஜியார் பவுண்டேசன் என்னும் அமைப்பின் மூலம் பல சமூகப் பணிகளை ஆற்றி வந்தார்.

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 90 ஆயிரமாக ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும்18 ஆயிரத்து 769 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 42 ஆயிரத்து 159 ஆக உயர்வடைந்துள்ளது என்று அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## மூவரைத் துரத்திச்...


(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பட்டுள்ள நிலையில் மோட்டார் சைக்கிளில் துரத்தி வந்து மூவர் மீது சரமாரியான வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம், குருநகர் கடற்கரை வீதியில் திருச்சிலுவை சுகநல நிலையத்துக்கு அண்மையாக நேற்று மாலை 4 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலுக்குள்ளானவர்களையும் தாக்குதல் நடத்தியவர்களையும் தமக்குத் தெரியாது என்றும், அவர்கள் வேறுபகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

ஒரு மோட்டார் சைக்கிளில் மூவர் பயணித்த நிலையில் அவர்களை இரண்டு மோட்டார் சைக்கிள்களில் துரத்தி வந்த நால்வர் இந்தத் தாக்குதலை நடத்திவிட்டுத்





தப்பிச் சென்றுள்ளனர்.

தாக்குதலில் படுகாயமடைந்த மூவரும் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களால் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

மூவரில் ஒருவரின் கால்கள் இரண்டும் கடுமையாக வெட்டுக்காயங்களுக்கு உள்ளாகியுள்ளது என்றும் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் குருநகர் பொலிஸ் காவலரணுக்குத் தகவலளிக்கப்பட்ட போதும் சுமார் ஒரு மணிநேரமாக பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகை தரவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டுப் பொலிஸாரும் முப்படையினரும் வீதிச் சுற்றுக்காவல் பணிகளில் ஈடுபடும் வேளையில் வன்முறைக் கும்பல் இந்தத் தாக்குதலை முன்னெடுத்துள்ளது.



# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் சகல மதத்தினரும் இணைந்து உண்மையைக் கண்டறிய வேண்டும்!

## சாணக்கியன் வலியுறுத்தல்

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் தமிழ், முஸ்லிம், சிங்களவர்கள் என அனைத்து மதத்தினரும் ஒன்றாக இணைந்து இதற்காகக் குரல் கொடுத்து உண்மையைக் கண்டறிய வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் நடைபெற்று 28 மாதங்களைக் கடந்துள்ள நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்தத் தாக்குதலில் உயிரிழந்துள்ள மக்களுக்கான நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கு வடக்கு, கிழக்கில் உள்ள அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து குரல் எழுப்ப வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு நீதி வேண்டி கடந்த சனிக்கிழமை கறுப்புக் கொடிகளைக் கட்டுமாறு பேராயர் மல்கம் ஆண்டகை விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக இன்றைய தினம் (அன்றைய தினம்) மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தனது அலுவலகத்துக்கு முன்பாக கறுப்புக்கொடியை ஏற்றிவைத் தார். ஈஸ்டர் தினத்தன்று மட்டக்களப்பு உட்பட நாட்டின் பல பகுதிகளில் தேவால யங்கள் உள்ளிட்ட இடங்களில் இடம்பெற்ற குண்டுவெடிப்புகளில் நூற்றுக்கணக் கானோர் உயிரிழந்திருந்தமையுடன் படுகாயங்களும் அடைந்திருந்தனர்.

இந்த நிலையில் இந்தத் தாக்குதலுக்குக் காரணமானவர்கள் மீது எடுக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கை திருப்தியளிக்கவில்லை எனக்கடந்த ஜூலை மாதம் 19 ஆம் திகதி கத்தோலிக்க திருச்சபை ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தது.

அதனடிப்படையில், தாக்குதலுக்குக் காரணமானவர்களை இதுவரையில் இனங்காண அரசாங்கம் தவறிய காரணத்தால், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி சனிக்கிழமை நாடு முழுவதும் கறுப்பு கொடி ஏற்றுமாறு பேராயர் மல்கம் ஆண்டகை வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அதனடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர் தனது அலுவலகத்துக்கு முன்பாக சனி காலை கறுப்புக்கொடியை ஏற்றி தனது ஆதரவை பேராயருக்கு வழங்கியுள்ளார். அனைத்து இன, மத மக்களும் இணைந்து ஈஸ்டர் தாக்குதல் தொடர்பிலான உண்மையைக் கண்டுபிடிக்க அழுத்தங்களை வழங்க வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் இதன்போது வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதன்போது ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் - ஈஸ்டர் தாக்குதல் நடைபெற்று இன்றுடன் (சனிக்கிழமை) 28 மாதங்கள் பூர்த்தியாகின்றன. பேராயர் மல்கம் ஆண்டகை கறுப்புக்கொடிகளை ஏற்றுமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அந்த நிகழ்வில் நானும் இணைந்திருந்தேன். கடந்த காலத்தில் பேராயர் மல்கம் ஆண்டகை உட்பட தெற்கில் உள்ள கத்தோலிக்க மதகுருக்கள் வடக்கு, கிழக்கில் நடந்த அநீதிகளுக்குக் குரல் கொடுக்கவில்லை.

நீங்கள் ஏன் அவர்களுக்காகக் குரல் கொடுக்கின்றீர்கள் என்று விமர்சனங்கள் முன்வைக்கப்படும். இருந்தபோதிலும் ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் நடைபெற்ற போது அதில் பெருமளவு பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்களாவர்.

மட்டக்களப்பு சியோன் தேவாலயத்தில் இடம்பெற்ற தாக்குதலில் 31 பேர் உயிரிழந்திருந்தமையுடன், அதில் 15 இற்கும் மேற்பட்ட சிறுவர்களும் உயிரிழந்திருந்தனர். அந்தத் தாக்குதலில் இரண்டு கண்களையும் இழந்த சிறுமியொருவர் தனது தாய் தந்தையையும் இழந்த நிலையில் உள்ளார்.

இவர்கள் என்ன தவறு செய்தார்கள் என்பதற்கான விடையைக் கேட்கவேண்டிய தேவையுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருக்கட்டும், இலங்கைத் தமிழரசுக் கட்சியாக இருக்கட்டும் அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாகக் குரல்கொடுக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. யாரும் செய்யவில்லையென்பதைப் பற்றிக் கதைப்பது அநாவசியமாகும். நாங்கள் நீதிகேட்கவேண்டிய நிலையுள்ளதால் அதனைக் கேட்கவேண்டும். அதன் காரணமாக நான் இதற்கு ஆதரவு வழங்கியுள்ளேன்.

கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி விசேட உரையென்று கூறிக்கொண்டு நகைச்சுவைப் படம் ஒன்றை 10 நிமிடங்கள் ஓட்டினார். இந்த அரசாங்கம் மக்கள் நலன் தொடர்பில் சிந்திக்காத அரசாங்கம் என்பதற்கு உதாரணம் அந்த உரையைத் தவிர வேறு எதுவும் தேவையில்லை.

ஈஸ்டர் குண்டுத்தாக்குதலில் 250 இற்கு மேற்பட்டவர்கள்தான் உயிரிழந்திருந்தனர். ஆனால் இந்த நாட்டில் 7,000 இற்கும் அதிகமானவர்களை இன்றைய கொவிட் தொற்றால் இழந்திருக்கின்றோம்.

ஜனாதிபதி நாட்டின் கடன்களைக் கட்டவேண்டும், வேலைவாய்ப்பைப் பாதுகாக்கவேண்டும், வியாபாரங்களைப் பாதுகாக்கவேண்டும் என்று கூறுகின்றாரே தவிர நாட்டின் மக்களின் உயிரைப் பாதுகாக்க வேண்டும் என்று கூறியமை மிகவும் குறைவு. பேராயர் மல்கம் ஆண்டகை இந்த விடயத்தை தனது கையிலெடுத்துத் தொடர்ந்து ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்கு நீதி கோரிவருவதன் காரணத்தால் இதற்கு ஒரு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையிருந்தது.

2009ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதி யுத்தத்தின்போது படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு இதுவரையில் நீதி கிடைக்கவில்லை. இறுதி யுத்தத்துக்கு முற்பட்ட காலத்தில் மதத்தலைவர்கள் கடத்தப்பட்டார்கள், கொல்லப்பட்டார்கள், தேவாலயங்கள் மீது குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டு அங்கு தஞ்சமடைந்திருந்த பொது மக்கள் கொல்லப்பட்டார்கள்.

அவர்களுக்கான நீதியும் கிடைக்கவில்லை. இவ்வாறான நிலையில் 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற சம்பவம் ஒன்றுக்கு இந்த நாட்டுக்குள் உடனடியாகத் தீர்வு கிடைப்பது என்பது கஷ்டம்தான்.

இருந்தபோதிலும் பேராயர் மல்கம் ஆண்டகை அதன்மீது நம்பிக்கை கொண்டு அது தொடர்பான அறிக்கைகளை விடுத்திருந்தார். அதில் தாக்குதல் தாரிகளுடன் தொடர்புபட்டவர்களின் பெயர்களை வெளிப்படுத்தியிருந்தார். கடந்த காலத்தில் இஸ்லாமிய கடும்போக்கு சக்திகள் ஒரு சிலதை பயன்படுத்தி யாரோ ஒருவர் தமிழர், சிங்களவர் மீது ஒரு தாக்குதலை நடத்தினார் என்று சொன்னால் நாளை பௌத்த மதத்தைச் சேர்ந்த ஒருவரையோ, சைவசமயத்தைச் சேர்ந்த ஒருவரையோ வைத்து ஒரு தாக்குதலை அவர் நடத்தமாட்டார் என்பதற்கு என்ன உறுதி இருக்கின்றது.

இவற்றுக்கெல்லாம் ஒரு முற்றுப் புள்ளி வைப்பதாகவிருந்தால் நடந்தது என்ன என்பதை வெளிப்படுத்தவேண்டும். அதற்கு நாங்கள் நிச்சயமாகக் குரல்கொடுப்போம். ஈஸ்டர் குண்டுவெடிப்பு நடப்பதற்கு சில தினங்களுக்கு முன்னர் வவுணதீவில் இரண்டு பொலிஸார் கொல்லப்பட்டனர்.

அவர்களைக் கொலைசெய்தார் எனக் கூறி முன்னாள் போராளி அஜந்தன் என்பவரைக் கைது செய்தார்கள். அது நடைபெற்று இரண்டு வருடங்களின் பின்னர் ஈஸ்டர் தாக்குதல் நடத்தியவர்கள் தான் அந்த பொலிஸாரை கொலை செய்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால் எதற்காக முன்னாள் போராளி அஜந்தனை தடுத்து வைத்துள்ளீர்கள் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயா கேட்டு கடிதம் எழுதிய பின்னரே அவரை விடுதலை செய்திருந்தார்கள். அந்த நேரத்திலேயே இந்த கொலைகளைச் செய்து அதன் பழியை முன்னாள் போராளிகள் மீது சுமத்தப்பட்டது. மாவீரர் தினம் நடைபெற்று சில தினங்களின் பின்னரே வவுணதீவு சம்பவம் நடைபெற்றது. அன்று கொல்லப்பட்ட அந்த இரண்டு பொலிஸ் அதிகாரிகளுக்கும் நீதிவேண்டும். ஒருவேளை அந்த ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் நடத்தியவர்கள் தான் இந்த பொலிஸ் உத்தியோகத்தர்களை படுகொலை செய்தார்கள் என்பது கண்டறியப்படாமலிருந்திருந்தால் அஜந்தன் இன்று வரையில் சிறையிலிருந்திருப்பார். அதனை வைத்து இன்னும் ஆயிரம் முன்னாள் போராளிகளைக் கைது செய்திருப்பார்கள்.

அரசாங்கத்துடன் இணைந்து கொண்டு அரசாங்கத்துக்கு உதவி செய்து, தமிழர்களைக் கொலைசெய்து இன்று வரையில் புனர் வாழ்வளிக்கப்படாத நிலையிலுள்ள ஒட்டுக்குழுக்களுக்கே புனர்வாழ்வளிக்க வேண்டும் என்று நான் கோரிவருகின்றேன். விடுதலைப் போராட்டத்திலிருந்தவர்களை நான் கூறவில்லை. ஆனால் விடு தலைப் போராட்டத்தைக் காட்டிக்கொடுத்து அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டவர்களுக்கே அரசாங்கம் முறையான புனர்வாழ்வை அளிக்கவேண்டும் என்று கூறுகின்றேன்.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் ஈஸ்டர் குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டிருந்தோம். அந்த பெற்றோர், உறவினர்கள் பட்ட கஷ்டங்களை நாங்கள் பார்த்தோம்.

உண்மையில் இந்த நாட்டில் தமிழ், முஸ்லிம், சிங்களவர்கள் என அனைத்து மதத்தினரும் ஒன்றாக இணைந்து இதற்காகக் குரல்கொடுத்து உண்மையைக் கண்டறிய வேண்டும். இன்று இதன் உண்மையைக் கண்டறியாமல் விடுவோமானால் நாளைய தினம் இவ்வாறான சம்பவங்கள் நடக்கலாம்.

இதனை இயக்கியதாக சும்மா பெயர்களைக் குறிப்பிடுவதை விடுத்துத் தாக்குதலின் சூத்திரதாரிகள் கண்டறியப்பட வேண்டும். அமைச்சர் சரத் வீரசேகர கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில் சில கருத்துகளை வெளிப்படுத்தியிருந்தார். பேராயர் கூறுகின்றார் நீங்கள் கைது செய்துள்ளவர்கள் சின்ன மீன்கள், பெரிய மீன்கள் எல்லாம் வெளியில் சுற்று கின்றன என்று. அந்த பெரிய மீன்கள் யார்? பேராயரின் கோரிக்கையென்பது நியாயமானது.

ஈஸ்டர் தாக்குதல் நடைபெற்று 28 மாதங்களைக் கடந்துள்ள நிலையில் நாங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்தத் தாக்குதலில் உயிரிழந்துள்ள மக்களுக்கான நீதியைப்பெற்றுக் கொடுப்பதற்கு வடக்கு கிழக்கில் உள்ள அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து குரல் எழுப்பவேண்டும்.

இருந்தபோதிலும் அரசாங்கத்துடன் இணைந்திருக்கும் சிலர் கடந்த காலத்தில் பல குற்றச்செயல்களைச் செய்தவர்களாக இருக்கலாம். அதனால் கொல்லப்பட்டவர்களுக்கு நீதிகேட்கத் தயங்கலாம்.

ஆனால் ஆகக்குறைந்தது சஜித் பிரேமதாஸ வீடமைப்பு அமைச்சராக விருந்த போது ஈஸ்டர் குண்டுத்தாக்குதலில் உயிரிழந்த 31 குடும்பங்களுக்கும் அமைத்துக் கொடுக்கப்பட்ட வீடுகள் கூட இன்று நிறைவுபெறாத நிலையிலுள்ளது.

அரசாங்கத்தின் கைக்கூலிகளாக இருப்பவர்கள் அந்த வீடுகளையாவது பூர்த்திசெய்து வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் இன்று உயர் பதவிகளில் இருக்கும் பொலிஸ் அதிகாரிகள் அஸ்கிரிய, மல்வத்து பீடங்களைச் சென்று சந்தித்து தங்களைப் பாதுகாக்குமாறு கோருகின்றனர்.

ஈஸ்டர் தாக்குதலில் தங்களைக் குற்றவாளிகளாக மாற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவித்திருக்கின்றனர். இது ஒரு நாடகமா அல்லது உண்மையாக அவர்களின் நிலைமையை போய்ச் சொன்னார்களோ என்பது தெரியாது. ஆனால் பொலிஸ் பிரிவில் அதியுயர் பதவியில் இருப்பவர்கள் மதத் தலைவர்களிடம் சென்று நீதிகேட்கும் நிலையேற்பட்டுள்ளது என்றால் இந்த நாட்டின் நிலைமை என்ன என்பது புரிகின்றது. செய்தவர்களை விடுத்து தங்களைக் குற்றவாளிகளாக மாற்ற முற்படுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். அவ்வாறானால் செய்தவர்கள் யார் என்ற கேள்வி எழுகின்றது. இன்று இந்த ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் இந்தளவுக்குத்தான் உள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

# இலத்திரனியல் நிதிப்பரிமாற்று அட்டைகள் தொடர்பில் மத்தியவங்கி விசேட அறிவிப்பு

கடன் அட்டை, பற்று அட்டை மற்றும் ஏனைய சேமிக்கப்பட்ட பெறுமதி அட்டை வைத்திருப்பவர்கள் அத்தகைய அட்டைகளைப் பயன்படுத்தி இலங்கைக்கு வெளியில் வதிகின்ற ஆள்களுக்கு வெளிநாட்டுச் செலாவணியில் சில கொடுப்பனவுகளை மேற்கொள்வதிலிருந்து கட்டுப்படுத்தப்பட்டுள்ளார்கள் தடுக்கப்பட்டுள்ளார்கள் எனக் குறிப்பிடப்படுகின்ற செய்திகள் பரப்பப்பட்டு வருகின்றன என மத்திய வங்கியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இலத்திரனியல் நிதிப் பரிமாற்று அட்டைகளை, அதாவது கடன் அட்டைகள், பற்று அட்டைகள் மற்றும் ஏனைய சேமிக்கப்பட்ட பெறுமதி அட்டைகள் பயன்படுத்துவதன் மீது மத்திய வங்கி புதிய கட்டுப்பாடுகளை எதையும் அறிமுகப்படுத்தவில்லை எனப் பொதுமக்களுக்கு அறியத்தருவதுடன் அத்தகைய அட்டைகளை வைத்திருப்போர் தனிப்பட்ட தன்மையிலான நடைமுறைக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் இலங்கைக்கு வெளியில் வதிகின்ற ஆள்களுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு அத்தகைய அட்டைகளைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும், அத்தகைய அட்டைகளின் தவறான பயன்பாட்டைத் தவிர்ப்பதற்கும் அத்தகைய வங்கிகளின் வெளிநாட்டுச் செலாவணி நிலைமைகளுக்கு அமைவாக கொடுக்கல்வாங்கல்களை முன்னுரிமைப் படுத்துவதற்கும் வெளிநாட்டுச் செலாவணியிலான கொடுக்கல்வாங்கல்களுக்காக இலத்திரனியல் நிதிப் பரிமாற்று அட்டைகளைப் பயன்படுத்துவதன் மீது சில வங்கிகள் சில கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்தியுள்ளன என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, இலத்திரனியல் நிதிப் பரிமாற்று அட்டைகளைப் பயன்படுத்தி சட்ட ரீதியான கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதில் எவையேனும் இடர்பாடுகளை அவர்கள் எதிர்கொள்வார்களாயின் தொடர்புடைய வங்கிகளைத் தொடர்புகொள்கின்ற அதேவேளை தற்போது வெளிநாட்டுச் செலாவணியை சிக்கனமாகப் பயன்படுத்துமாறும் பொது மக்களை மத்திய வங்கி கோருகின்றது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இது நம் தெரிவுப் பிழை

வரலாற்றில் வாய்ப்புகள் எப்போதும் கிடைப்பதில்லை. கிடைக்கும் வாய்ப்புகளைச் சரிவரப் பயன்படுத்த முயற்சிக்கா விட்டால் வாய்ப்புகள் மீண்டும் கிடைக்காமல் போய் விடும். இதுதான் இலங்கையின் தமிழினத்தின் பட்டறிவாக – அனுபவப் பாடமாக – இருக்கின்றது.

கடந்த ஏழு தசாப்தங்களுக்கு மேலாக இலங்கையைத் தீவில் வாழ்வியலுக்கான உரிமைகளுக்காகப் போராடி வரும் நமது துன்பியல் நிலைமை. இதுதான்.

வாய்ப்புகள், சந்தர்ப்பங்கள் கதவைத் தட்டியபோது அவற்றை சரிவரப் பயன்படுத்தாமல் புறம் ஒதுக்கி, உதாசீனம் செய்து, விட்டேத்தியாக நடந்து கொண்டமையின் பெறு பேறாகத்தான் நாம் இன்று நட்டாற்றில் விடுபட்டிருக்கின்றோம் என்பது எங்கள் ஒவ்வொருக்கும் புரிகின்றது.

எந்தெந்தச் சந்தரப்பங்களை எப்படி, எப்படியெல்லாம் கோட்டை விட்டோம், வாய்ப்புகளை எப்படியெல்லாம் எட்டி உதைத்துப் புறம் தள்ளினோம் என்று வரலாற்றின் முடிந்த பக்கங்களைப் புரட்டிப் பார்த்து ஆதங்கப்பட்டுக் கொண் டிருக்கின்றோம்.

ஆனால், அந்த நீண்ட வரலாற்றுத் துன்பியல் பாடங்க ளில் இருந்து பட்டறிவு பெற்று நம்மை இனிமேலாவது திருத் திக் கொள்கின்றோமா என்றால், இல்லை என்றுதான் கூறவேண்டும்.

பிரிந்து நின்று, பிளவுபட்டு, ஒருவரை ஒருவர் இழுத்தி விழுத்தி, உள்சகோதரச் சண்டைகளிலேயே – மேதல்க ளிலேயே – எங்கள் பலத்தை சீர்கெடுத்துப் பலவீனப்படுத்தி நம்மை நாமே பின்னடைவுக்குள் தள்ளிக் கொண்டு நிற் கின்றோம்.

எல்லோரையும் அவரணைத்து ஒன்றுபட்ட சக்தியாக – தேசிய எழுச்சியாக – நம்மைத் தூக்கி விடக் கூடிய தலைமை களை அடையாளம் கண்டு, தேர்வு செய்வதை விடுத்து, மேலும் மேலும் நம்மைப் பிரிந்து, பலவீனப்படுத்தக் கூடிய வர்களை நமக்குள் பிரிந்து நின்று நம் தலைவர்களாக்கி நம் தலையில் நாமே மண்ணை அள்ளிப் போட்டுக் கொண் டிருக்கிறோம்.

எங்களின் அனைத்து வலிமைகளையும் இழந்து பல வீனப்பட்டு போய் கிடக்கும் தமிழினத்தவர்களாகிய நாம், கொஞ்ச நஞ்சம் எஞ்சியிருக்கக் கூடிய – அற்ப சொற்ப – ஜனநாயக வலிமையையும் கூட, மேலும் மேலும் நாமே பல வீனப்படுத்தும் அபத்தத்தையே செய்து கொண்டிருக்கின் றோம்.

நம்மை அடக்கி, ஒடுக்கி எமது தாயகத்திலிருந்தே நிரந்தர மாகத் துடைத்தழிக்க வேண்டும் என்று கங்கணம் கட்டி நிற்கும் எதிரிக்கு, அவன் எதிர்பார்ப்பதை நாமே நிறைவேற்றித் தந்தபடி இருக்கின்றோம் என்பதுதான் வேதனையான விடயம்.

தமிழர்களைக் கடைத்தேற்றுவதற்கு எந்தத் தீர்க்கதரிச னப் பார்வையோ, உருப்படியான செயற்றிட்டமோ, காரிய மாற்றும் திடசித்தமோ, மக்களுக்காக அர்ப்பணிப்புச் செய் யக் கூடிய திட சித்தமோ இல்லாத தலைவர்களை –

வெறும் பதவிகளுக்காக மாறி மாறி அறிக்கைப் போர் களை நடத்தும் காட்போர்ட் சண்டியர்களை ஆளுக்கு ஒரு பிரதிநிதியாகத் தெரிவு செய்து, நம்மையும் பலவீனப்படுத்தி, அவர்களின் பதவி ஆசைக்கும் இடமளித்து, ஏமாளியாகி நிற்கின்றோம்.

இதுதான் இன்று தமிழர்களின் அரசியல் யதார்த்தப் புற நிலை உண்மையாகும்.

'வந்ததும் அது, சிவன் தந்ததும் அது' என்ற மாதிரி, நாங் கள் ஒன்றுபட்டு தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளும் வெறும் வெற்று வேட்டு பதவியாசைப் பிரதிநிதிகள்தாம் என்றால், அவர்களை விமர்சித்து, அதன் மூலம் அரசியல் லாபம் தேடி, வாக்குக ளைச் சுருட்டி, பதவிக் கதிரைகளுக்கு மாற்றாக வந்தர்க ளும் கூட அதே ரகம்தான். ஜாடிக்கு ஏற்ற மூடிகள்தாம். அவர்கள் மறு தரப்பை விமர்சித்தமை எல்லாம் 'சட்டியைப் பார்த்து பானை கறுப்பு என்ற கதை மாதிரியான' விவகாரம் தாம்.

வெறும் கற்பனை உலகில் வாழ்ந்து, அபத்தப் பிரசாரங்க ளைச் செய்து, இனத்தை நட்டாற்றில் விட்டபடி பதவி சுகம் அனுபவிக்கும் தரப்புகளையும் புறம் ஒதுக்கி –

காரிய சாத்தியமான விடயங்களை வெளிப்படையாகப் பேசி, ஒளிவு மறைவின்றிக் காரியங்களை நடத்தி, தமிழ்த் தேசியத்தை இயன்றவரைக் காப்பாற்றக் கூடிய தரப்புகளை மட்டும் தமிழினம் தானாக அடையாளம் கண்டு மக்கள் பிரதி நிதிகளாகப் பேணாதவரை, இந்தப் பதவி ஆசை பிடித்த மண்குதிரைகளை நம்பி மேலும் மேலும் நட்டாற்றில் தமிழி னம் மூழ்க வேண்டியதுதான்.

# கொரோனா மரண வீதத்தில் உலகில் இலங்கை முதலிடம்!

ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு



உலகலாவிய ரீதியில் அவதானிக்கும் போது 10 லட்சம் சனத்தொகைக்கு கொவிட் தொற்றால் உயிரிழப்பவர்களின் தொகை இலங்கையில் 9 சதவீதமாகக் காணப்படு கிறது.

கொவிட் மரண வீதத்தில் உலக நாடுகளில் இலங்கை முதலிடம் வகிப்பதாக ஐக்கிய மக் கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

தற்போது கொவிட் சமூகப்பரவலாக வியா பித்துள்ளது என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அத்தோடு உண்மையான தரவுகளை மறைப்பதன் மூலமும், பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளின் அளவைக் குறைப்பதன் மூலமும் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்பதை அரசாங்கம் உணர வேண்டும் என்றும் நளின் பண்டார சுட்டிக் காட்டினார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்த சனிக்கிழமை நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

உலக சுகாதார ஸ்தாபனத்தின் வழிகாட் டல்களை மீறி 60 வயதுக்கு மேற்பட்டோ ருக்கு தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத் தில் முன்னுரிமையளிக்காமையே மரணங் கள் அதிகரிக்கப் பிரதான காரணமாகும்.

உலகலாவிய ரீதியில் அவதானிக்கும் போது 10 லட்சம் சனத்தொகைக்கு கொவிட் தொற்றால் உயிரிழப்பவர்களின் தொகை இலங்கையில் 9 சதவீதமாகக் காணப்படு கிறது. கொவிட் மரண வீதத்தில் உலக நாடுகளில் இலங்கை முதலிடம் வகிக்கிறது.

தென் ஆசியாவில் இலங்கையில் மாத் திரமே 10 லட்சம் சனத்தொகைக்கு 9 சதவீதம் மரணம் பதிவாகிறது. ஏனைய நாடு களில் ஒரு சதவீதத்துக்கும் குறைவாகவே உள்ளது.

கொவிட் பரவல் மூன்றாம் அலை மர ணத்தின் திசையில் சென்று கொண்டிருக் கிறது. இந்த திசையை நாம் அனைவரும் இணைந்து மாற்ற வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# சீனாவிடம் இருந்து ஒட்சிசன் கோரல் வெளிவிவகார அமைச்சர் தகவல்

அதிகரித்து வரும் தேவையை பூர்த்தி செய்ய ஒட்சிசனை உடனடியாக வழங்குவதற்கு சீனாவின் உத வியை இலங்கை வெளியுறவு அமைச்சர் பேராசிரியர் ஜி. எல்.பீரிஸ் கோரியுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், கொழும்பிலுள்ள சீனத் தூதர் சீ என்ஹொன்னிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத் துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற சந்திப்பின் போது இது தொடர் பான கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

இலங்கைக்கான தொடர்ச் சியான ஆதரவுக்கு சீன அர சுக்கு நன்றி தெரிவிக்கும் அதேவேளை, சீனாவின் உறு தியான உதவிக்கு வெளி



விவகார அமைச்சர் தனது பாராட்டைத் தெரிவித்தார்.

இந்நிலையில், இலங்கை யின் சமூக - பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவதில் சீனா வின் தொடர்ச்சியான அர்ப் பணிப்பை சீனத் தூதர் மீண் டும் வலியுறுத்தினார்.

இந்தக் கலந்துரையாடல் கொவிட் - 19 ஒத்துழைப்பு, பொருளாதார மேம்பாடு, வறுமை ஒழிப்பு மற்றும் சீனா மற்றும் இலங்கை இடையே பலதரப்பு ஒத்துழைப்பு ஆகி யவை தொடர்பில் கலந்துரை யாடப்பட்டது.

இதேவேளை, இந்தியா வில் இருந்து முதல் தொகுதி ஒட்சிசன் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக இந்திய உயர் தூதரகம் தெரி வித்துள்ளது.

இலங்கை மற்றும் இந் திய கடற்படைகளுக்குச் சொந்தமான இரண்டு கப்பல் கள், இந்தியாவில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித் திருந்தன.

இதில், சென்னையில் இருந்து 40 தொன் மருத்துவ ஒட்சிசனை ஏற்றிவந்த கப்பல், வெள்ளிக்கிழமை இரவு இலங் கையை வந்தடைந்து விட்ட தாக இந்திய உயர் தூதரகம், தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

# 1,800 இற்கும் அதிக மதுபானப் போத்தல்களை கொண்டு சென்ற மூன்று பேர் கைதாகினர்

இங்கிரிய, வத்தளை மற்றும் மஹவ ஆகிய பிரதேசங்களில் அரச அனுமதிப்பத் திரம் இன்றி 750 மில்லி லீற்றர் கொள்ளள வுடைய 304 மதுபானப் போத்தல்கள், 375 மற்றும் 187.5 மில்லி லீற்றர் கொள்ளளவுகளை யுடைய 1,893 மதுபானப் போத்தல்களுடன் சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட் டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரி வித்துள்ளது.

இங்கிரிய பொலிஸ் பிரிவில் இங்கிரிய நகரத்தில் அரச அனுமதிப் பத்திரம் இன்றி 750 மில்லிலீற்றர் கொள்ளளவு கொண்ட 208 மதுபானப் போத்தல்களை வான் ஒன்றில் கொண்டு சென்ற சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த சந்தேகநபர் 41 வயதுடைய இங்கிரிய பிரதேசத்தைச் சேர்ந்த வராவார்.

இதே போன்று வத்தளை பொலிஸ் பிரி வில் வத்தளை நகரத்தில் அனுமதிப்பத்திர மின்றி 750 மில்லிலீற்றர் கொள்ளளவு கொண்ட 96 மதுபானப் போத்தல்களை வான் ஒன்றில் கொண்டு சென்ற சந்தேகநபரொ ருவர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த சந் தேகநபர் 37 வயதுடைய ராகமை பிரதேசத்



தைச் சேர்ந்தவராவார்.

மஹவ பொலிஸ் பிரிவில் நாகொல்லாகம பிரதேசத்தில் அனுமதிப்பத்திரமின்றி 375 மில்லிலீற்றர் கொள்ளளவுடைய 424 மது பான போத்தல்களுடனும், 187.5 மில்லி லீற் றர் கொள்ளளவுடைய 1,469 மதுபான போத் தல்களுடன் 22 வயதுடைய கல்கமுவ பிரதே சத்தைச் சேர்ந்த சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர்கள் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

## எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

அங்கம் - 53

ந.வித்தியாதரன்

ஊடக ஜாம்பவான் எஸ்.டி.சிவநாயகம், பிற ஊடகவியலாளர்களுக்கு - பத்திரிகையாளர்களுக்கு - ஒரு முன்மாதிரி 'மொடல்'! ரோல் மொடல்(Role Model) என்பார்களே அந்த மாதிரி.

பத்திரிகை அல்லது பெரும் ஊடக நிறுவனத்தில் ஆசிரிய பீடத்திற்கு பொறுப்பாக - பிரதம ஆசிரியர், ஆசிரியர் அல்லது உதவி ஆசிரியர் பதவி நிலைக்கு - வருபவர்கள் அவரிடம் கற்றுக்கொள்ள வேண்டிய முன்மாதிரிப் பாடங்கள் நிறைய உண்டு.

ஒரு பத்திரிகை ஆசிரியராக சில பல ஆண்டுகள் மதிக்கப்படும் நிலையில் நான் இருந்திருக்கின்றேன் என்றால் அதற்குக் காரணம் அவரின் முன்மாதிரி, அதிலிருந்து நான் படித்த சில பாடங்கள்தான்.

'தினபதி', 'சிந்தாமணி' பண்ணையின் வாண்மை விருத்தி தொடர்பாக எனது இந்தக் கட்டுரைத் தொடரில் பல இடங்களில் அவ்வப்போது ஒரு விடயத்தை நான் விடாது சுட்டி வந்திருக்கிறேன். வாசகர்கள் மனதிலும் அது ஆழமாகத் தைத்திருக்கும். அது –அந்தப் பண்ணையில் எங்களுக்கு மேலே இருந்தவர்கள் நம்மைக் கூப்பிட்டு, இருத்தி வைத்து, நேரில் சொல்லித் தந்தவையோ போதித்தவையோ சொற்பம்தான். ஆனால் நாங்கள் அவர்கள் பக்கத்தில் இருந்து, அவர்களைப் பார்த்துப் படித்து, அறிந்து கொண்டவை அனேகம்.

ஐந்து வருடங்களுக்கும் குறைவான காலம் அங்கிருந்து நான் கற்றவை இத்துணை என்றால், சிவநாயகம் ஐயாவுடன் பக்கத்தில் பத்து, இருபது வருடங்கள் பணி செய்த ம.வ.கானமயிலநாதன், என்.பத்மசீலன், எஸ்.எஸ்.செல்வநாயகம் போன்ற பத்திரிகைத்துறை பெரியவர்கள் எவ்வளவு கற்றிருப்பர் என்று நான் வியப்பதுண்டு.

அங்கு சிவநாயகம் ஐயா மட்டும்தான் எமக்கு ரோல் மொடல் என்பதல்ல. ஒரு துணை ஆசிரியர், செய்தி ஆசிரியர், உதவி ஆசிரியர், செய்தியாளர் எப்படி இருக்க வேண்டும், அவர்களுக்கிடையேயான ஊடாட்டம் எவ்வாறு அமைய வேண்டும் என்பவை எல்லாவற்றையும் ஒரு முன்மாதிரி வடிவத்தில் நான் அங்கு தரிசித்தேன்.

சாதாரணமாக ஓர் அலுவலகத்திற்குள் நீங்கள் வானொலி கேட்கக்கூடாது, தொலைக்காட்சி பார்க்கக் கூடாது, மற்றைய அலுவலர்களுடன் அரட்டை அடித்துப் பேசிக்கொண்டு பணியாற்றக்கூடாது. ஆனால் பத்திரிகை அலுவலகத்தில் இவையெல்லாம் செய்யலாம். செய்ய வேண்டும். இந்த வரிசையில் இப்போது கைத் தொலைபேசியிலும் மடிக்கணினியில் கணினியிலும் கண்டதையெல்லாம் 'பிறவுஸ்' பண்ணி அலைவதும் கூட சேர்த்துக் கொள்ளப்பட்டு விட்டது. இவ்வளவு அத்துமீறல்களும், ஆரவாரங்களும் இருந்தாலும் ஓர் ஆசிரிய பீடத்துக்குரிய அதீத அமைதி, மௌனம், நிசப்தப் பண்பியல்பு அங்கு பேணப்படும்.

சரி, இனி சிவநாயகம் ஐயாவிடம் நாம் கண்ணுற்ற

| பழைய முறை | புதிய முறை |
|---|---|
| ணா | ணா |
| றா | றா |
| னா | னா |
| ணை | ணை |
| லை | லை |
| ளை | ளை |
| னை | னை |
| ணொ | ணொ |
| றொ | றொ |
| னொ | னொ |
| ணோ | ணோ |
| றோ | றோ |
| னோ | னோ |



- படித்த - ஒரு முன்மாதிரியை இன்று பகிர விரும்புகிறேன். அரசியலாகட்டும், பொது விடயமாகட்டும், சமூக நீதி விவகாரமாகட்டும், ஏதேனும் ஒன்று தொடர்பில் ஒரு முடிவு எடுப்பதற்கு முன்னர் அதனை தீர்க்கமாக ஆராய்வார். அது தமது மனதுக்குச் சரியானது என்று பட்டால், அதில் ஒரு முடிவு எடுத்த பின்னர் அதில் தீர்க்கமாக இருப்பார். உறுதியாக நிற்பார். நழுவல், வழுவல், சமாளிப்பு என்றெல்லாம் இருக்காது. அசைந்து கொடுக்கார். திடமாக நிற்பார்.

அதே நேரம் மாற்றுக் கருத்துகளுக்கு இடம் அளிப்பார். ஆனால் தனது முடிவு – தீர்மானம் – சரி என்று தன் மனதில் பட்டால் அதை விட்டுக் கொடார். எந்த சமரசமும் செய்யார்.

எழுபதுகளிலும் எண்பதுகளிலும் - என் நினைவு சரி என்றால் – நான் 'தினபதி' - 'சிந்தாமணி' நிறுவனத்தில் புகும் முன்னரே தமிழ் எழுத்து முறைமை தொடர்பான ஒரு சர்ச்சை கிளம்பி இருந்தது. அது - எழுத்துச் சீர்திருத்தம் பற்றியது. எண்பதுகளுக்குப் பின்னர் பிறந்த தலைமுறைக்கு அது பற்றிய சர்ச்சையே புரியாது.

இன்றைய கணினி யுகத்தில் எழுத்துச் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டதன் மேன்மையை – தீர்க்கதரிசனப் பார்வையை - அறிவியலோடு நோக்கி நாம் மெச்சுகின்றோம்.

ஆனால் மத சீர்திருத்தம், சமூக சீர்திருத்தம் என்று எல்லாவற்றிலும் புரட்சி செய்யப் புறப்பட்ட பகுத்தறிவுப் பகலவன் தந்தை ஈ.வெ.ரா.பெரியார் தமிழில் எழுத்துச் சீர்திருத்தத்தை முழு முனைப்பில் முன்னெடுக்க வேண்டும் என்று புறப்பட்டபோது, அதற்கு எதிராகப் பழமை பேணும் தமிழர் சமூகம் கிளர்ந்தெழுந்தது. தமிழின் தனித்துவத்தை, அதன் சிறப்பை, விஞ்ஞான முறைமை என்ற பெயரில் சீரழிக்கும் சின்னத்தனமான வேலையே இது, சீர்திருத்தம் அல்ல என்று பலரும் இந்த முயற்சியை வெறுத்து ஒதுக்கினார்.

அதனால் இவ்விடயம் சர்ச்சைக்குரிய பேசுபொருளாக சுமார் ஒன்றரை தசாப்த காலம் இழுபட்டது.

தமிழக முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர். எண்பதுகளின் பிற்பாதியில் பெரும் பிரயத்தனத்தில் –பகீரத முயற்சியில் – பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் – எழுத்துச் சீர்திருத்தத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தார்.

1985 இல் நாம் உதயன் நாளிதழை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்த போது பழைய எழுத்து முறைமையே நடைமுறையில் இருந்தது. இரண்டு, மூன்று ஆண்டுகள் கழித்துத்தான் புதிய முறைமைக்கு நாம் மாறினோம்.

பல நூற்றாண்டுகளாக இருக்கும் – நீடிக்கும் – தமிழ் எழுத்து வடிவத்தை மாற்றுவதைத் தமிழின் தொன்மையை, பழமையை பேண விரும்புவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. மொழியின் காலாதிகாலத் தனித்துவத்தைச் செயற்கையாக சிதைக்கும் அற்பத்தனம் இது என்று அவர்கள் எல்லோரும் கொதித்தெழுந்தனர்.

இளமை முதலே தந்தை பெரியாரின் திராவிட இயக்கத்திலும் நாத்திக வாதத்திலும் ஈடுபாடு காட்டி, அதனோடு இணைந்து வளர்ந்த சிவநாயகம் ஐயாவின் மனதில் தந்தை பெரியாரின் அந்த எழுத்துச் சீர்திருத்த யோசனை பற்றிப் பிடித்துக்கொண்டது.

விஞ்ஞான நடைமுறைக்கு உகந்ததாக மொழிச் சீர்திருத்தம் அவசியம் என உணர்ந்த சிவநாயகம் ஐயா முழுமையாக எழுத்துச் சீர்திருத்த யோசனையின்பால் - திட்டத்தின்பால் - ஆகர்ஷிக்கப்பட்டார். அது பற்றிய சாதக பாதகங்களைத் தேடித்தேடி துருவி ஒரு முடிவுக்கு வந்தார். இனி வேகமாகப் பயணிக்கப் போகின்ற கணினி யுகத்திற்குள் உலகின் ஏனைய தரப்பினருடன் ஈடு கொடுத்து, தமிழ்மொழியும் தமிழர்களும் நிலை பெற்று, முன்னேற வேண்டுமென்றால் இந்த எழுத்துச் சீர்திருத்தம் தவிர்க்க முடியாத கட்டாயம் என்று அவர் தீர்மானித்தார்.

இந்த எழுத்துச் சீர்திருத்தத்திற்கு தமிழுலகம் – குறிப்பாக அதில் பிரதானமாக மையப்படுத்தப்பட்டிருக்கும் தமிழகம் – எப்போது வரும், என்றாவது ஒரு நாளைக்கு வருமா, அல்லது இது வெறும் யோசனைத் திட்டமாக முன்வைக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படாமல் அப்படியே அடிபட்டுப் போகுமா என்றெல்லாம் சந்தேகம் நிலவிய சூழலில், எஸ்.டி.எஸ். ஐயா ஒரு முடிவுக்கு வந்தார்.

தமது தினபதியின் அத்தாணி மண்டபத்தில் அது குறித்து ஆணித்தரமாகக் கருத்து வரைந்தார். இன்றில்லாவிட்டாலும் என்றோ ஒரு நாள் – பல தசாப்தங்கள் கழித்தும் கூட - இந்த எழுத்துச் சீர்திருத்தத்திற்கு தமிழுலகம் மாறுவது தவிர்க்க முடியாத வரலாற்று கட்டாயமாக இருக்கும். அதற்காக - அதை நோக்கிய செல்நெறிக்காக - வரும் வாரம் முதல் சிந்தாமணி வார வெளியீட்டில் ஆசிரிய தலையங்கப் பகுதி எழுத்துச் சீர்திருத்த முறையிலேயே அச்சாகி வாசகர்களுக்கு வரும். வரவிருக்கும் எழுத்துச் சீர்திருத்தம் எப்படி அமையும் என்பதை வாசகர்கள் இதன் மூலம் அறிந்து, புரிந்து கொள்ள முடியும். – என்று தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் நடைமுறைக்கு வருவதற்கு சுமார் எட்டு ஆண்டுகளுக்கு முன்னரே அதை இலங்கையில் முதன் முதலில் அறி




முகப்படுத்தியவர் தீர்க்கதரிசி - தூரப்பார்வைமிக்க எஸ்.டி.எஸ். ஐயாதான்.

*"தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் தவிர்க்கமுடியாத கட்டாயமாக நடைமுறைக்கு வருவது உறுதி. இத்தகைய நிலையில் அந்தச் சீர்திருத்தத் தமிழைக் கையாளாமல் வறட்டுக் கௌரவத்துடன் பழைய முறையையே தொடர்வோம் என்று நாம் பிடிவாதமாக நிற்போம் என்றால் அது தமிழ் உலகில் இருந்து நம்மை அந்நியப் படுத்துவதாக முடியும்"* - என்று நேரத்துடனேயே எச்சரித்தார் அவர்.

ஏடுகளில் இருந்த தமிழ் எழுத்துக்களுக்கு முதல் சீர்திருத்தம் கண்டவர் பதினெட்டாம் நூற்றாண்டில் வீரமாமுனிவர். அடுத்த நவீன சீர்திருத்தத்திற்கு இருபதாம் நூற்றாண்டில் வலியுறுத்தி முன்மொழிந்தவர் தந்தை பெரியார். அதை முந்திக்கொண்டு இலங்கையில் நடைமுறைப்படுத்திக் காட்டியவர் எஸ்.டி.எஸ். சிவநாயகம் ஐயா. அதனை எழுத்துச் சீர்திருத்தமாக உலகில் முழு அளவில் நடைமுறைப்படுத்தியவர் அதன் பின்னர் தமிழக முதல்வர் எம்.ஜி.இராமச்சந்திரன்.

சிவநாயகம் ஐயா தாம் முன்மொழிந்து, நடைமுறைப்படுத்திக் காட்டிய எழுத்துச் சீர்திருத்தம் இன்று உலகம் முழுவதும் நடைமுறைக்கு வந்திருப்பதை நேரில் கண்டு பூரித்த பின்னரே அவர் நம்மை விட்டுப் பிரிந்தார் என்பது மனநிறைவு தரும் விடயமாகும்.

(வளரும்...)

# திருகுதாளம்!



மணிவண்ணன் (யாழ்.மேயர்)




ப.தர்சானந் (யாழ்.மாநகர சபை உறுப்பினர்)



ந.லோகதயாளன் (யா.மா.ச. உறுப்பினர்)

தென்னிலங்கை விளம்பரதாரர் நிறுவனம் ஒன்றிற்கு யாழ் மாநகர எல்லைப் பகுதிக்குள் சபையின் அனுமதி இன்றி ‘கன்றி போட்’ அமைக்க மாநகர முதல்வர் தன்னிச்சையாக அனுமதிப்பதைத் தடுப்பது தொடர்பில் கொண்டு வரப்பட்ட பிரேரணை கடந்த வியாழனன்று யாழ் மாநகர சபையில் 3 மணி நேரம் கடும் சர்ச்சையை உண்டு பண்ணியது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2021ஆம் ஆண்டின் 8 ஆவது மாதாந்த கூட்டம் 2021-08-19 அன்று சபை முதல்வர் வி.மணிவண்ணன் தலைமையில் இடம்பெற்றபோதே இது இடம்பெற்றது.

இந்த விடயம் பெரும் சர்ச்சையை உண்டு பண்ணும் என்பதனை அறிந்த ஈ.பி.டி.பியும் சபை நடவடிக்கைகளை புறக்கணித்தது.

‘கன்றி போட்’ மாநகர சபை எல்லைப் பகுதிக்குள் அமைப்பதற்காக தென்னிலங்கையைச் சேர்ந்த ரெம் சொலூசன் என்னும் நிறுவனத்தை 2021-07-31 அன்று முன்னிரவு நேரம் மாநகர முதல்வர் நேரில் அழைத்து வந்து, பலாலி வீதியில் இடம் காண்பித்துச் செல்லும் வரையில் சபை உறுப்பினர்கள் இந்த விடயத்தை அறிந்திருக்கவில்லை. விளம்பர வளைவு அமையும் வட்டார உறுப்பினர்களிற்கே அது தெரிந்திருக்கவில்லை.

தென்னிலங்கை நிறுவனம் ஒன்றிற்கு சபையில் பிறிதொரு விடயத்திற்கு பெற்ற ஒப்புதலை, இந்த விடயத்துக்குக் கபடமாகக் காண்பித்து, அந்த விளம்பர பலகை நாட்டும் வேலையை மாநகர முதல்வர் இரகசியமாக அனுமதித்தார் என்ற விவகாரம் கசிந்தமையை அடுத்து விடயம் சூடு கண்டது.

ஜூலை 31ஆம் திகதி பரமேஸ்வராச் சந்தியில் காதும் காதும் வைத்தாற்போல, சத்தம் சந்தடி ஆரவாரமின்றி, வளைவு நாட்ட இரகசியமாகமுற்பட்ட சமயம் சில மாநகர சபை உறுப்பினர்களினாலும் அயல் காணி உரிமையாளர்களினாலும் அது தடுக்கப்பட்டது.

இதனை அடுத்து, இவ்விடயத்தில், மேயரின் ஏற்பாட்டில் சபையின் வேலைப் பகுதிக் குழுவான (மராமத்து குழு) ‘சுத்துமாத்து’ குழுவாகச் செயல்பட்டது. மறுநாள் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம். அத்தினத்தில், தொலைபேசியில் விதிமுறைக்கு முரணாகத் தகவல் வழங்கி, 2ஆம் திகதி இந்த மராமத்து குழுவைக் கூட்டி, இந்த அமைப்பு வேலைகளுக்கு ஒப்புதல் வழங்கினர். இக்கூட்டத்துக்கான அறிவித்தல் தவறானது என்பதனால் எமது உறுப்பினர் எம்.எம். நிபாகிர் குழுக் கூட்டத்திற்கு சமுகமளிக்கவில்லை.

அதன் பின்பு 5ஆம் திகதி முதல் இது வரை 3 தடவை சபையின் திட்டமிடல் குழுவிற்கு இவ்விடயம் எடுக்கப்பட்டு, 12ஆம் திகதி சபையின் நிதிக் குழுவிலும், அவசர அவசரமாக எடுத்து ஒப்புதல் பெற முயற்சிக்கப்பட்டது.

இந்த விளம்பர வளைவு அமைக்க இதுவரை சபை அனுமதி வழங்கவில்லை எனத் தெரிவிக்கும் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் 2021-05-19ஆம் திகதிய கடிதம் மூலம் வளைவு அமைக்க ரெம் சொலுசன் நிறுவனத்தை மாநகர சபை தேர்வு செய்துள்ளதனால் அதற்கான அனுமதியை வழங்குமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு எழுத்து மூலம் பரிந்துரைத்துள்ளார். ( கடிதம் இணைக்கப்பட்டுள்ளது) மாநகர முதல்வரின் கோரிக்கையின் பெயரிலேயே வீதி அபிவிருத்தி அதிகார சபை தனது நடவடிக்கையில் இறங்கியது.

இதற்கமைய ரெம் சொலூசன் நிறுவனம் வளைவு அமைக்க விரும்பிய வீதிகளைக் கேட்டறிந்த வீதி அபிவிருத்தி அதிகார சபை, அவற்றை அமைப்பதானால் நிறைவேற்ற வேண்டிய பணிகளாக 13 விடயங்களைப் பட்டியலிட்டு ஓர் அறிவுறுத்தல் கடிதத்தை 2021-07-21அன்று வழங்கியுள்ளது. (கடிதம் இணைக்கப்பட்டுள்ளது.

(07ஆம் பக்கம் பார்க்க)

IV(ආ) කොටස - ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය - 2019.06.21 769
Part IV (B) - GAZETTE OF THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA - 21.06.2019

SCHEDULE - 02

LEVY OF CHARGES FOR THREE WHEELERS

| Serial No. | Levy of Charges | Amount Rs. |
|---|---|---|
| 01 | Registration of Three Wheelers | 5000.00 |
| 02 | Monthly Rent | 300.00 |
| 03 | For stickers issued with Permit | 100.00 |

06-609

**JAFFNA MUNICIPAL COUNCIL**

**Declaration of Names and details of Roads**

IN terms of Section 2 of Provincial Council (Consequential Provisions) Act, 12 of 1989 to be read with Section 71(1) Chapter 252 of Municipal Council Ordinance, as per the resolution No of JMC/Gen/2019/05/02 of Council Meeting held on 07.05.2019, by virtue of the powers vested in this Municipal Council, the roads, stated in the under mentioned Schedule, which are situated within the administrative limits of Jaffna Municipal Council are hereby made public as the roads belong/ rightful of Jaffna Municipal Council.

Now, It is hereby informed publicly of Section 71(1) Chapter 252 of Municipal Council Ordinance, if anyone claim ownership in lands of those roads identified by Jaffna Municipal Council shall raise his or her objections to me with documents that prove his/ her rights, within one month from the date of this notice published in the *Gazette* or institute legal action to establish his/ her rights in the appropriate court of law within three months from the date of the *Gazette* that published this notice together with one month prior notice to Jaffna Municipal Council.

R. T. JEYASEELAN,
Municipal Commissioner,
Jaffna.

| Serial No. | Code No. | Road Name | Starting Point | End Point | Length of Street Line (feet) | Length (km.) | Average width (m.) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 101 | Police Station Road | Beach Road | K.K.S. Road | 33 | 0.26 | 6 |
| 2 | 102 | Esplanade Road | Beach Road | Clock Tower | 33 | 0.55 | 3 |
| 3 | 103 | Rajendra Prasath Road | Beach Road | Sir Vaiththilingam Thuraichchamy Road | 25 | 0.3 | 3 |
| 4 | 104 | Bankshall Street | Rajendra Prasath Road | Press Road | 25 | 1.08 | 4.5 |
| 5 | 105 | 1st Cross Street | Beach Road | Hospital Road | 50 | 1.2 | 3 |
| 6 | 107 | 2nd Cross Street | Beach Road | Hospital Road | 20 | 1.04 | 3 |
| 7 | 108 | 3rd Cross Street | Beach Road | Hospital Road | 20 | 1.1 | 3 |
| 8 | 109 | 4th Cross Street | Beach Road | 3rd Cross Street | 20 | 0.9 | 3 |
| 9 | 110 | Sinnakadai East Road | Beach Road | Main Street | 20 | 0.25 | 3 |

முதலாம் குறுக்குத் தெரு தொடர்பான மாநகர சபையின் வர்த்தமானி அறிவித்தல்.

මාර්ග සංවර්ධන අධිකාරිය
வீதி அபிவிருத்தி அதிகாரசபை
Road Development Authority

"Maganeguma Mahamedura", Denzil Kobbekaduwa Mawatha, Koswatta, Battaramulla, Sri Lanka.

My No. RDA/PM&R/GG-XIV
Your No.
Date 2021.07.21

අංක: 194,
වත්තල.

[illegible]

ගැන්ට්‍රි පුවරුව ඉදිකිරීම සඳහා අවසරය ලබා ගැනීම සම්බන්ධවයි.

[illegible] 2021.06.21 [illegible]

[illegible] (0+085), [illegible] (1+260), [illegible] (4+080), Sangilithoppu - Chemmany Rd (01+620), [illegible] (315+510), [illegible] (0+700), [illegible] (3+460) [illegible]

1. [illegible] 5,500,600.00 [illegible]
2. [illegible]
3. [illegible] 21 [illegible]
4. [illegible]
5. [illegible]
6. [illegible]

Telephones:-
Chairman 2862767, Director General 2862795, Working Director 2887257, General Number ++94-11-2046200
Additional Director Generals (Projects 2862485, AO&M 2864804, CD 2882194, NP 2886923)
Directorates (Administration 2865245, Construction 2864388, Engineering Services 2864803, EO&M 038-2291373, ESD 2187165
Finance 2864799, Highway Designs 2874024, Internal Audit 2872661, Lands 2889350 Legal 2186044, Mechanical 2872273, MM 2882196, Planning 2882995, Procurement 2886863, QA&PM 2887235, R&D 2632649 Rural Bridges 2623896, Training 2869342)

2021-07-21 அன்று வீதி அபிவிருத்தி அதிகார சபை வழங்கிய வழிகாட்டல் கடிதம். (அனுமதி அல்ல)

# திருகுதாளம்!

7. පුවරුවේ වාහන ධාවනය අභිමුඛ වනසේ මාර්ග දිශාවන් ප්‍රදර්ශණය විය යුතු අතර පුවරුවෙහි ප්‍රතිවිරුද්ධ දිශාවේ වෙළඳ ප්‍රචාරක කටයුතු සිදු කළ හැක.

8. ගැන්ට්‍රි පුවරු ව්‍යුහය එකී අනුමත සැලැස්මේ අදාල ප්‍රමිතීන්ට අනුකූලව ඉදිකර ඇති බවට (යාපන) විධායක ඉංජිනේරු වෙතින් අනුකූලතාවය ලබා ගත යුතුය.

9. අදාල ගැන්ට්‍රි පුවරු ඉදිකිරීමේ දී හා එහි නඩත්තු කටයුතු කරගෙන යාමේ දී මාර්ග සංවර්ධන අධිකාරියේ දේපලවලට කිසිදු හානියක් නොකළ යුතුය. සිදුවන අලාභයන් සම්බන්ධයෙන් දැරිය යුතු වන පිරිවැය මාර්ග සංවර්ධන අධිකාරිය වෙත ගෙවීම් කිරීමට ඔබ බැඳී සිටී. ඉදිකිරීමෙන් පසු මෙම ගැන්ට්‍රි පුවරුවල අයිතිය මාර්ග සංවර්ධන අධිකාරිය සතුවේ.

10. ප්‍රදර්ශනය කිරීමට අපේක්ෂිත වෙළඳ දැන්වීමේ ආකෘතියක් (Art Work) මෙම අංශයට ඉදිපත් කර ඒ සඳහා අනුමැතිය ලබා ගත යුතුය. එකී ආකෘතිය වෙනස් කිරීමට අවශ්‍ය වන විට එකී වෙනස්කම් සඳහාද අවසර ලබා ගත යුතුය.

11. මෙම ගැන්ට්‍රි පුවරුව ප්‍රදර්ශණය මඟින් තුන්වන පාර්ශවයකට යම් හානියක් සිදුවුවහොත් එකී හානිපූර්ණය වෙනුවෙන් රුපියල් මිලියනයක (1,000,000.00) වටිනාකමින් යුත් රක්ෂණ ආවරණ 07ක් ලබාගෙන මෙම අංශය වෙත ඉදිරිපත් කළ යුතුය.

12. මෙම ගැන්ට්‍රි පුවරුවේ ප්‍රචාරය කළ හැක්කේ සාමාන්‍ය වෙළඳ දැන්වීම් පමණි. ඩිජිටල් ( Digital ) හෝ ත්‍රිමාණ (Tri-Vision) තාක්ෂණයෙන් යුතු දැ ප්‍රදර්ශණය කිරීමට අවසර ලබාදෙනු නොලැබේ.

13. මෙම ගැන්ට්‍රි පුවරුවේ දේශපාලනික දැන්වීම් / අදහස් හෝ පුද්ගල ඡායා රූප කිසිවක් පළකල නොහැක.

ඉහත සඳහන් කොන්දේසි වලට යටත්ව ගැන්ට්‍රි පුවරුව ඉදිකිරීමට එකඟ වන්නේනම් ඉහත ගාස්තු ගෙවීමෙන් පසුව ඔබ ආයතනයත් මාර්ග සංවර්ධන අධිකාරියත් අතර ගිවිසුමකට එළඹිය යුතු අතර ඒ සඳහා මෙම ලිපිය නිකුත්කල දින සිට දින 30ක් කාලයක් ඇතුළත එම කටයුතු නිම කොට අවසර ලබාගත යුතු බවත් අදාළ කාල සීමාවතුල දන්වා ඇති පරිදි ක්‍රියා කිරීමට අපොහොසත් වුවහොත් මෙම ලිපිය අවලංගු වන අතර ඔබගේ ඉල්ලීම පිළිබඳව සලකා බලනු නොලැබෙන බව කාරුණිකව දන්වා සිටිමි.

[signature]
අජිත් ජයසිංහගේ,
නියෝජ්‍ය අධ්‍යක්ෂ,
වත්කම් කළමනාකරණ හා ආදායම්,
මාර්ග සංවර්ධන අධිකාරිය.

අතිරේක අධ්‍යක්ෂ
වත්කම් කළමණාකරණ හා ආදායම් අංශය
මාර්ග සංවර්ධන අධිකාරිය,
"මහනුවර මගමැදුර"
216, ඩෙන්සිල් කොබ්බෑකඩුව මාවත,
කොස්වත්ත, බත්තරමුල්ල.

පිටපත් - 01. පළාත් භාර අධ්‍යක්ෂ ( උතුරු ) - දැ. වැ. ස.
02. ප්‍රධාන ඉංජිනේරු ( යාපනය ) - දැ. වැ. ස.
03. විධායක ඉංජිනේරු (යාපනය) - දැ.වැ.ස. හා අ.ක.ස.

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையால் வழங்கப்பட்ட கடிதம் சிங்கள மொழியில் இருந்ததனைப் பயன்படுத்தி அது ஓர் அனுமதிக் கடிதமாக ஏமாற்றிக் காட்டப்பட்டுள்ளது. இதேநேரம் வீதி அபிவிருத்தி அதிகார சபையான ஓர் அரச திணைக்களத்திற்கு யாழ். மாநகர சபையினதும் மாநகர முதல்வரின் றப்பர் முத்திரையான அரச சொத்தையும் பயன்படுத்தி வளைவை அமைக்கும் தென்னிலங்கையைச்சேர்ந்த தனியார் நிறுவனத்திற்கு 50 வீதக் கழிவு வழங்குமாறு கடிதம் வழங்கி, அதிகார துஷ்பிரயோகத்தில் யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் ஈடுபட்டார். இது ஓர் முறைகேடாகவும் பல சந்தேகத்தை ஏற்படுத்துவதான சர்சையாகவும் அமைந்தது. ( கடிதம் இணைக்கப்பட்டுள்ளது)

இதே நேரம் இந்த கன்றிபோட் எனப்படும் விளம்பரப் பதாகை அமைக்க வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மட்டும் 55 லட்சத்து 600 ரூபாவுடன் வருட வாடகையும் வழங்கப்பட வேண்டும் என வீதி அபிவிருத்தி அதிகார சபை நிபந்தனை விதிக்கும் அதே நேரம், மாநகர சபைக்கு ஒரு பதாகைக்கு ஆண்டிற்கு ஒரு லட்சத்து 92 ஆயிரம் ரூபா மட்டும்தான் கிடைக்கும் என்பது மாநகர முதல்வரின் கூற்று உறுதி செய்கின்றது . இந்த ஒரு லட்சத்து 92 ஆயிரம் ரூபா வருமானத்தை ஈட்ட சபை வாகனம், அதிகாரிகள், ஊழியர்கள் எனப் பலர் அத்திட்டத்தை நடைமுறைப்படுத்தச் செய்வதற்கு அலைந்து திரிகின்றனர். இதற்கு இதுவரை எத்தனை லட்சம் ரூபா செலவு ஏற்பட்டது என சபையில் சக உறுப்பினர் ந.லோகதயாளனால் கேள்வியாகவும் எழுப்பப்பட்டது.

மாநகர சபை எல்லைப் பரப்பிற்குள் கொட்டகையில் வசிப்பவர்கள் வீடு அமைக்க அல்லது ஓர் மதில் கட்ட அனுமதிக்குச் சென்றால் காணி உறுதி, தோம்பு, காணி வரைபடம், கட்டட வரைபடம், சோலை வரி, நகர அபிவிருத்தி அதிகார சபை அனுமதி, விண்ணப்பம் இருக்கின்றதா என்று கேட்டு எது இல்லை என்றாலும் அவற்றை எடுக்கும் வரை அலைக்கழிப்புத் தான் இடம்பெறுகின்றது. அதற்காக உரியவர் மாதக் கணக்கில் அலைய வேண்டும். இதுவரை ஒரு குடும்பத்தையேனும் மாநகர சபை வாகனத்தில் ஏற்றிச் சென்று அந்த அனுமதிகளை எடுத்து வழங்கியதே கிடையாது. அவ்வாறு வழங்கினால் பரவாயில்லை. ஆனால் தென்னிலங்கை நிறுவனம் வெறும் ஒரு படம் வழங்க, அதனை வைத்துக் கொண்டு ஏனைய அனுமதிகளை எடுத்துக்கொடுக்க, சபை சார்பில் சபை வாகனத்தில் அலைகின்றனர் என உறுப்பினர் தெரிவித்த கருத்து ஆராயப்பட வேண்டியது. இந்த நிறுவனம் வழங்கிய வரைபடத்தில் 2021-08-10ஆம் திகதியே இடப்பட்டுள்ளதனால் மாநகரத்திற்குள் வளைவை அமைக்க விட்ட பின்பே அந்த வரைபடம் கூட கோவைக்குள் நுழைக்கப்பட்டது என்பதும் நிரூபணமாகின்றது.

சிவன் ஆலயத்தின் வடக்கு மூலையில் உள்ளது. அது எவ்வாறு மாறுபட்டது என ஆராய்ந்தால் அங்கும் அதிர்ச்சி. அதாவது வேம்படி பாடசாலை அமைந்துள்ள முதலாம் குறுக்குத் தெரு என்கின்ற மாநகர சபைக்குச் சொந்தமான வீதியினையும் சேர்த்து வீதி அபிவிருத்தி அதிகார சபை தன்னுடையது என ஆக்கிரமித்து விட்டது. தற்போது இந்த நிறுவனம் கோரும் இடத்தில் பருத்தித்துறை வீதியில் அனுமதி வழங்கினால் இந்த வீதியின் ஆதிக்கத்தை வீதி அபிவிருத்தி அதிகார சபை நிலைநாட்டும். முதலாம் குறுக்குத் தெரு இல்லாமலும் போகலாம். முதலாம் குறுக்குத்தெரு மாநகர சபைக்கு உரியது என மாநகர சபை வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தல் உண்டு. (இணைக்கப்பட்டுள்ளது)

யாழ்ப்பாணம் மாநகர சபை
යාපනය මහ නගර සභාව
JAFFNA MUNICIPAL COUNCIL

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். පේදුරුතුඩුව පාර, යාපනය. Point-Pedro Road, Jaffna.

அலுவலகம් / කාර්යාලය / Office 021 222 2275 தொலைநகல் / ෆැක්ස් / Fax 021 222 2334 இணையத்தளம் / වෙබ් අඩවිය / Internet www.jaffna.mc.gov.lk

My No JMC/Mayor/Gen/2021
2021.05.19

Chief Engineer
Road Development Authority,
Jaffna.

**PERMISSION TO INSTALL WELCOME GANTRY IN JAFFNA**

We kindly request you to give permission to install welcome gantry in Jaffna Municipal area. This work will be done by TEMP solution. The following 08 roads are selected for this purpose. Since it is done On the request of Municipal Council, Please be kind enough to grant TEMP solution atleast 50% off from your taxes.

RDA Roads:

1. Point pedro road
2. Palaly road
3. K.K.S road
4. Manipay road
5. Karainagar road
6. Kandy – A9 road
7. Pannai road
8. Chemmani road

Thank You.

[signature]
Mayor,
Municipal Council,
Jaffna.

V.Manivannan
Mayor
Municipal Council
Jaffna

2021-05-19 அன்று மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கிய சிபார்சுக் கடிதம்.
இக் கடிதத்திலேயே 50 வீத கழிவிற்கும் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

யாழ்நகரின் பல பகுதியிலும் வீதியோர மின்கம்பங்களூடாக 11 ஆயிரம் கிலோ வாட்ஸ் மின்சாரம் செல்கின்றது. அதில் பலாலி வீதி முழுமையாகவும் தற்போது 11 ஆயிரம் கிலோ வாட்ஸ் மின்சாரமும் செம்மணி வீதியில் 33 ஆயிரம் கிலோ வாட்ஸ் மின்சாரமும் வருகின்றது. ஏதேனும் கட்டுமானம் அமைப்பதாயின் 11 ஆயிரம் கிலோ வாட்ஸ் மின்சாரம் வரும் வீதியில் கீழாக 2.7 மீற்றர் இடைவெளியும் கிடையாக எனில் 1.5 மீற்றரும், 33 ஆயிரம் கிலோ வாட்ஸ் மின்சாரம் வரும் வீதியில் 3.3 மீற்றர் இடைவெளியும் இருக்க வேண்டும் என இ.மி.சபை தெரிவிப்பதனை ஓர் உறுப்பினர் எழுத்தில் கோரிப் பெற்று சபையில் சமர்ப்பித்திருக்கின்றார். (கடிதம் இணைக்கப்பட்டுள்ளது.)

ஆனால் அந்த விதிமுறைகளை எல்லாம் உதாசீனம் செய்து, அவற்றை மீறி, தனிப்பட்ட அக்கறை காட்டி, ஒரு தென்னிலங்கை நிறுவனத்திற்கு அனுமதி வழங்கியே தீருவேன் என முதல்வர் அடம் பிடிப்பது பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துவது தவிர்க்க முடியாத ஒன்று. எனவே இதனை இடைநிறுத்த வேண்டும் எனத் தெரிவித்தே ஓர் உறுப்பினரால் அந்தப் பிரேரணை முன்மொழியப்பட்டது.

இதிலே நிறுவனம் அனுமதி கோரும் வீதிகளில் பருத்தித்துறை வீதியும் ஒன்று. பருத்தித்துறை வீதி தொடர்பில் மாநகர சபையின் சொத்துப் பதிவேட்டின் பிரகாரம் பருத்தித்துறை வீதி ஆரம்பம் முதல் 3.67 கிலோ மீற்றர் தூரம் – அதாவது வேம்படிச் சந்தி முதல் கல்வியங்காட்டுச் சந்திவரை – எனத் தெளிவாகத் தெரிவிக்கின்றது. ஆனால் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் நாட்டப்படும் கிலோ மீற்றர் கல்லில் 4 ஆவது கிலோ மீற்றர் கல் சட்டநாதர்

இவ்வாறான நிலையில் இத்தனை சர்ச்சைகளையும் எமது கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சக உறுப்பினரான ந.லோகதயாளன் எழுப்பியதன் பெயரில் இந்த விடயம் தற்போது தற்காலிகமாக நிறுத்தப்பட்டு, இவை தொடர்பில் ஆராய்ந்து இடங்களை நேரில் பார்வையிட்டு, சபைக்கு அறிக்கையிட 5 உறுப்பினர்கள் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழு தமது பரிந்துரையை மீண்டும் சபைக்குச் சமர்ப்பிக்கும். அவ்வாறு சமர்ப்பிக்கும் அறிக்கையின் பிரகாரம் சபை இறுதி முடிவினை எட்டும் என முடிவாகியது. மக்களிற்கான நீதியான, நியாயமான விடயத்தை எவர் செய்தாலும் ஆதரிக்கலாம். அதுவே மாறாக இருந்தால் எவராயினும் முன் நின்று எதிர்க்க வேண்டும் என்பதில் நாம் திடமாகவுள்ளோம். இதேநேரம் அரச திணைக்கள கடித தலைப்பை பயன்படுத்தி வரிச் சலுகை வழங்க சிபார்சு செய்ததான விடயம் சார்பில் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், வடக்கு மாகாண ஆளுநர் ஏன் இதுவரை மௌனம் காக்கின்றனர் என்பதும் புரிய வில்லை.

இதே நேரம் யாழ். நகரில் ஓர் முதலீட்டின் மூலம் வருமானத்தை ஈட்ட தென்னிலங்கை நிறுவனம் ஒன்றை ஊக்குவிக்கப்படுவதிலும் பார்க்க, மாநகர வர்த்தகர்கள் அல்லது மாவட்ட வர்த்தகர் அல்லது மாகாண முதலீட்டாளர்கள் யாரோ ஒருவருக்கு வழங்கி அதனை ஊக்குவிக்கலாம். மாறாக தேசியம் என வாயால் கூறிக்கொண்டு தென்னிலங்கை முதலீட்டாளர்களை ஊக்குவிக்க வேண்டியதன் பின்னால் புதைந்து கிடக்கும் மர்மத்தை – நோக்கத்தை – மாநகர வரியிறுப்பாளர்களே இலகுவாக புரிந்து கொள்வார்கள்.

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

உமது இல: எனது இல.: NP/CE(J)/Gen/2021/8/01 திகதி: 13.08.2021

ந.லோகதயாளன்
இல.65 மணற்தரை வீதி,
கந்தர்மடம்
யாழ்ப்பாணம்

விடயம் :தகவல்கள் பெறுதல்

தங்களின் கோரிக்கைக்கு இணங்க தங்களால் கேட்கப்பட்ட தகவல் பின்வருமாறு:

01. எமது மின் கட்டமைப்பு இல்லாத இடத்தில் அனுமதி பெறப்பட தேவையில்லை.
11kV மின் கட்டமைப்பு காணப்படும் இடத்தில் நிலைக்குத்து மற்றும் கிடையாக முறையே 2.70m , 1.5m இடைவெளிகள் பேணப்படுதல் வேண்டும்.
33 kV மின் கட்டமைப்பு காணப்படும் இடத்தில் நிலைக்குத்து மற்றும் கிடையாக முறையே 3m , 2m இடைவெளிகள் பேணப்படுதல் வேண்டும்.

02. எமக்கு தொடர்பற்றது.

03. எமது மின் கட்டமைப்பு இல்லாத இடத்தில் ஆபத்தில்லை.
11 kV மின் கட்டமைப்பு காணப்படும் இடத்தில் நிலைக்குத்து மற்றும் கிடையாக முறையே 2.70m , 1.5m இடைவெளிகள் பேணப்படுதல் வேண்டும்.
33 kV மின் கட்டமைப்பு காணப்படும் இடத்தில் நிலைக்குத்து மற்றும் கிடையாக முறையே 3m , 2m இடைவெளிகள் பேணப்படுதல் வேண்டும்.

04. 11 kV மின் கட்டமைப்பு காணப்படும் இடத்தில் நிலைக்குத்து மற்றும் கிடையாக முறையே 2.70m , 1.5m இடைவெளிகள் பேணப்படுதல் வேண்டும்.
33 kV மின் கட்டமைப்பு காணப்படும் இடத்தில் நிலைக்குத்து மற்றும் கிடையாக முறையே 3m , 2m இடைவெளிகள் பேணப்படுதல் வேண்டும்.

05. அவ் இடத்தில் 33 kV மின் கட்டமைப்பு காணப்படுகின்றது. இதற்கு நிலைக்குத்து மற்றும் கிடையாக முறையே 3m , 2m இடைவெளிகள் பேணப்படுதல் வேண்டும்.

06. பலாலி வீதியின் ஆரம்பம் முதல் பரமேஸ்வராச் சந்தி வரை - 11 kV
செம்மணி வீதி - 33 kV

[signature]
என்திரி.க.லிங்கரூபன்
பிரதம பொறியியலாளர்,
யாழ் பிரதேசம்.
சுன்னாகம்.

பிரதம பொறியியலாளர் அலுவலகம் - யாழ் பிரதேசம்

இலங்கை மின்சார சபை, மின்சாரநிலைய வீதி, சுன்னாகம். 40000, இலங்கை.தொ. இல. +94 21 224 0302 / +94 21 321 2261
| தொலை நகல்: +94 21 224 4435 | மின்னஞ்சல்: cejaffna@ceb.lk, cejaffna@gmail.com | www.ceb.lk |

வீதிகளில் இரும்பு அல்லது தகர விளம்பரம் அமைக்க இலங்கை மின்சார சபையின் நிபந்தனை விதிகள்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 108

**312. ஆனந்தபுரத்தின் சமர் விடுதலைப் புலிகளின் முதுகெலும்பை உடைத்ததாக ஏன் சொல்லுகிறீர்கள்?**

இரண்டு பகுதிகளிடையே நடந்த போரை ஆராய்ந்த பல பேரின் கணிப்பு அது. அதேசமயம் போருக்கு முன்னும் போரிலும் இருபக்கத்தாலும் பொது மக்கள் மேல் நடத்தப்பட்ட மனித உரிமை மீறல்களும் மனிதாபிமானமற்ற தாக்குதல்களும் உச்சக் கட்டத்தை அடைந்ததும் இங்குதான். தங்களுக்கு பொறி அங்குதான் வைக்கப்படும் என்று விடுதலைப் புலிகள் கணக்கெடுத்திருந்தார்கள். புதுக்குடியிருப்பில் அடைந்து கிடந்த பொதுமக்களும் விடுதலைப் புலிகள் ஏதோ ஒரு வியூகத்தில் இராணுவம் முன்னேறுவதை தடுத்து, தங்களைக் காப்பாற்றி வேறு பாதைகளால் வெளியேற வைப்பார்கள் என்ற நம்பிக்கை கொண்டிருந்தார்கள்.



பின்னர் அங்கிருந்து வெளியேறிய – நாங்கள் முகாம்களில் கண்ட – ஆனந்தபுரம், புதுக்குடியிருப்பு மக்களிடையே கேட்ட அவலங்கள் எண்ணிலடங்காதவை. அவை எல்லாவற்றையும் விவரித்து பச்சாதபம் தேடுவதில் நன்மைகள் விளையப் போவதில்லை.

ஆனாலும் தங்களது எதிர்த்தாக்க வியூகங்களுக்காக, விடுதலைப் புலிகள் நடத்திய மனித உரிமை மீறல்களும், சித்திரவதைகளும் எங்களது பட்டறிவிப்புக்காக பகிரப்பட வேண்டியவை.

விடுதலைப் புலிகள் முன்னேறிவரும் ஸ்ரீலங்கா இராணுவத்தைத் தாக்கிப் பின்தள்ளலாம் என்ற வியூகத்திற்கு புதுக்குடியிருப்பு மக்களை முன்னிறுத்தி, தாங்கள் ஆனந்தபுரத்தில் அரண்கள் அமைத்து, தாக்குதல்களுக்குத் திட்டமிட்டிருந்தனர்.

இதற்கு ஆள்சேர்ப்புக்காக இளைஞர்கள் இயலக்கூடியவர்கள் எல்லோரும் யுத்த பயிற்சிக்கு கட்டாயப்படுத்தப்பட்டு, குடும்பங்களில் இருந்து பிரிக்கப்பட்டு, அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்பட்டார்கள். மீறியவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார்கள். சில குடும்பங்கள் தங்களது பெண் குழந்தைகள் அப்படி அகப்படக்கூடாது என்பதற்காக யாரோ அகப்பட்டவருக்குத் திருமணம் செய்து வைத்து, மணமான பெண் என வாதாடி விலக்கு பெற்றதும், சில குடும்பங்கள் ஒன்றாக சேர்ந்து அவர்களை பாதுகாக்க குழிகளில் போட்டு அதன்மேல் ஏதாவது போட்டு மூடி தாங்கள் படுத்து கிடந்ததாகவும், இப்படியான சந்தர்ப்பங்களில் நேரம் கடந்து மூச்சுத் திணறி சில பிள்ளைகள் இறந்து விட்ட சோகக் கதைகளையும் சொன்னார்கள்.

சண்டைக்கு இரண்டு, மூன்று நாள்களுக்கு முன்னும் பல பெண்கள் பிடிக்கப்பட்டு போர் முனைக்கு கொண்டு செல்ல அவர்கள் தப்பி ஓடினாலும் கண்டு பிடிக்கப்பட்டு அவர்களது தலைமயிர்கள் கத்தரிக்கப்பட்டன. அவர்கள் அழுதபோது, சில மூத்த பெண் போரளிகளான துர்க்கா, விதுஷா, கமலினி போன்றோர் தலைமயிரை வெட்ட வேண்டாம் என்று வாதாடியபோதும் சார்ல்ஸ் அந்தனி அது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என உத்தரவிட்டார் எனவும் கதறி அழுதார்கள். ஏன் என்று கேட்டபோது போருக்கு போகாத இந்தப் பிள்ளைகளின் தலை வெட்டால், இரண்டு, மூன்று நாள்களில் வந்த ஆமியால் அவர்கள் விடுதலைப் புலிகள் என்று சுட்டுக் கொல்லப்பட்டனர், அல்லது அள்ளி கொண்டு சென்றார்கள், தாங்கள் இன்று வரை அவர்களை மீளக் காணவில்லை என்று ஓலமிட்டார்கள்.

தாங்கள் புதுக்குடியிருப்பில் அடைபட்டு கிடக்க, இராணுவத்தை தாக்க விடுதலைப் புலிகள் புதுக்குடியிருப்பை நோக்கி வந்தார்கள். அதை எதிர்த்து இராணுவம் பலத்த எதிர்த்தாக்கம் செய்ததால் தங்களில் பலர் மடிந்ததார்கள் எனவும் தாங்கள் இரண்டு பேருக்கும் இடையில் அகப்பட்டுத் தப்ப வழியில்லாமல் தவித்ததையும் இழந்ததையும் சொன்னார்கள்.

விடுதலைப் புலிகளின் வியூகம் நன்றாக இருந்தாலும், அவர்களுக்கு நல்ல, மூத்த, விசுவாசமுள்ள போராளிகள் தலைமை தாங்கினாலும் ,இராணுவத்திடமிருந்த ஆள்தொகை, அவர்கள் பாவித்த ஆயுதங்கள் முன் தாக்குப் பிடிக்க முடியவில்லை என்றும் சொன்னார்கள்.

**313. விடுதலைப் புலிகளின் வியூகம் நல்லாக இருந்தும் ஏன் இராணுவம் முன்னேறியது என்று சொல்லவில்லையா?**

தாங்கள் அங்கிருந்து போரிட்ட மூத்த போராளிகள் தீபன், கடாபி, மணிவண்ணன், துர்க்கா, விதுஷா, நாகேஷ், கமலினி, மோகனா, அமுதா, சுயாக்கி என்று பலபேரில் நம்பிக்கை வைத்தார்கள் என்றும், அவர்களோடு நின்று போரிட்ட எல்லாரும் அழிக்கப்பட்டபோது நம்பிக்கை எல்லாம் தகர்ந்ததால் இனி ஒன்றும் செய்வதற்கில்லை என்று அழிபாடுகளிடையே வெளியேறியதாகவும் சொன்னார்கள்.

தாங்கள் பார்த்தவரை ஸ்ரீலங்கா இராணுவம் ஒரு நண்டின் கால் இடுக்கி முறையில் முன்னேறி தங்களை நடுவில் வைத்து விடுதலைப் புலிகளை இரண்டு பக்கத்திலும் கூட்டி மேவித் தாக்கினார்கள். இது புதுக்குடியிருப்பில் நடக்க, இதனால் புதுக்குடியிருப்பு, இரணைப் பாலை, புது மாத்தளான் வீதியில் எதிர்பார்த்து அவர்களோடு சேர்ந்து தாக்குவதற்கு நின்ற சார்ல்ஸ் அந்தனியின் படையும் பிரிக்கப்பட்டு முன்னேறி வந்த இராணுவத்தின் எல்லா இடுக்கிகளும் பச்சை புல்லுமோட்டையில் சந்தித்து, விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள், பொருள்களை எடுத்துச் செல்ல ஆள்பிடிக்கப்பட்டவர்களையும் கொன்று, அந்தப் பாதைகளையும் கைப்பற்றினர்.



இந்த இடுக்கிகள் தங்களைச் சுற்றி மடக்காது விடுதலைப் புலிகள் தீரமாக போராடினர். ஆனாலும் ஆனந்தபுரத்தில் அகப்பட்டுக் கொண்ட போராளிகளை மீட்டெடுக்க மேலும் போராளிகள் பிரபாகரனால் அனுப்பிக் கொள்ள முடியவில்லை என்றும், தாங்கள் வெளியேறிக் கொண்டிருக்கும்போதுதான் ஆனந்தபுரத்திலுள்ள போராளிகளை மீட்க பிரபாகரன் கடற்தளபதி சூசையை 100 போராளிகள் வரையில் படகுகளில் முள்ளிவாய்க்கால் வந்து முன்னேறும்படி கேட்டும் அவையும் தாக்கப்பட்டதால் மற்றவை திரும்பி சோர்ந்து விட்டதாகக் கேள்விப்பட்டதாகச் சொன்னார்கள்.



அவர்களுடைய அபிப்பிராயத்தில் ஆனந்தபுரத்தில் விடுதலைப் புலிகளின் 75 வீதப் போராளிகள் தாக்குதல்களுக்கு இருந்திருப்பார்கள். அவ்வளவு பேரும் காவு கொள்ளப்பட்டிருப்பார்கள். அதற்குப் பிறகு விடுதலைப் புலிகளுக்கு நின்று காரியமாற்ற முள்ளந்தண்டு இருக்காது. இனி தாக்குப் பிடிக்க அவர்களால் முடியாது, அவர்களால் தங்களைப் பாதுகாக்க முடியாது என்று வெளியேறியதாகவும் இது ஏழிலிருந்து பத்து நாள்கள் நடந்து அதன் பின்பே தங்களை வெளியேற்றி தாங்கள் முகாமுக்கு வந்ததாகவும் சொன்னார்கள்.

ஆகவே இந்தச் சமரின் தொடக்கமும் முன்னைய நடந்த சம்பவங்களும் போரின் திக்கில் முக்கியத்துவம் பெறுகின்றன. சமயோசிதத்தால் இந்தச் சமர் நடந்திருக்கத் தேவையற்றதாகிறது.

(வளரும்......)



# மெய்நிகர் வகுப்பறை

## Online Classroom 34

ஜனனி தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் - (தகவல் தொழில்நுட்பம்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

மெய்நிகர் வகுப்பறை தொடர் ஆரம்பமானதில் இருந்து மெய்நிகர் வகுப்பறை வசதிகளை வழங்கக் கூடிய பல செயலிகளைப்பற்றிப் பார்த்திருக்கின்றோம். இவை நாளாந்தம் புதியவடிவில் மேம்படுத்தப்பட்டு கிடைக்கின்றன. புதிது புதிதாக தினமும் உருவாகிவருகின்றன. இன்றைய மெய்நிகர் தளங்களின் வியாபாரப் போட்டியில் ஒன்றைவிட ஒன்று தன்னை முன்னிலைப்படுத்தி வணிகத்தில் முதலிடம் பிடிக்க முயல்கின்றன. இதனால் மெய்நிகர் தளங்கள் தொடர் தேர்ச்சியாக மேம்பாடடைகின்றன. இந்த பல்தேசியக் கம்பனிகளின் போட்டி வணிகம் காரணமாக பயனர்களுக்கு நன்மைகள் பெருகிய வண்ணம் உள்ளன.

வீடியோ அழைப்புகளுக்கான பல செயலிகள் ஊடகங்களில் தினம்தினம் அறிமுகமாகின்றன. இது ஒருவகை மெய்நிகர் வணிகயுத்தம். ஒவ்வொன்றின் உண்மையான செயல்பாடு என்ன என்பது பற்றி விரிவாக ஆராயவேண்டியிருக்கிறது. ஊடகங்களில் எது சிறந்தது என்ற விவாதங்கள் பக்கச்சார்புடையவையாகவே காணப்படுகின்றன. ஊடகங்கள் பெரும்பாலும் பயனர் எண்களை அடிப்படையாகக் கொண்டே எது சிறந்தது என்று விவாதிக்க முற்படுகின்றன. உண்மையில் பயனர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு என்பது பல்வேறு காரணிகளில் தங்கியுள்ளது. அது ஒருவகை மாய எண்ணிக்கை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

பொதுவாக வீடியோ கான்பரன்சிங் வசதிகளைக் கொண்ட செயலிகள், அதாவது ஒன்லைன் சந்திப்புக்களுக்கான நிலையான வாய்ப்புக்களைக் கொடுப்பவை கல்வி மற்றும் வணிகத்தில் முதன்மை பெறுகின்றன. தரமான அலகுவான வீடியோத் தொடர்பாடல் இந்த நாள்களில் கவனத்தை ஈர்க்கின்றன. பயன்பாட்டின் எளிமை, பயனர் நன்மை கருதிய செயல்பாடு மற்றும் விலை ஆகியவற்றின் அடிப்படையில் நோக்கப்படத்தக்கன. இங்கு எம்மத்தியில் பிரபல்யமாகவுள்ள சூம் செயலி தவிர்ந்த சில முன்னணி வீடியோத் தொடர்பாடல் தளங்களைப் பற்றிப் பார்க்கலாம்.

### 1. மைக்ரோசாப்ட் ரீம்

முன்னர் இணையவழி வீடியோத் தொடர்பிற்கு பிரபல்யமாக இருந்த ஸ்கைப் இன்னும் வீடியோ கான்ஃபரன்சிங்கிற்கான பிரபலமான செயலியாக வலம்வந்தாலும், இதனை மைக்ரோசாப்ட் நிறுவனம் வாங்கிய பின்னர் மைக்ரோசாப்ட் டீம்ஸின் நலனுக்காக ஸ்கைப் வேகமாக வெளியேற்றப்படுகிறது. இப்போது பெரிய வணிகங்களுக்கு ரீம்ஸ் சிறந்த தீர்வாகச் சொல்லப்படுகின்றது.

மைக்ரோசாப்ட் ரீமில் பயனரின் சுயவிவரத்தின் கீழே அமைப்புகள் மெனு அமைந்துள்ளது. ஆனால் சில பயனர்கள் சிறிது நேரம் ஒரு செட்டிங்ஸ் ஐகானைத் தேடிய பிறகுதான் கண்டுபிடிப்பார்கள் இது ஒரு சிறிய குறைபாடாகவுள்ளது எனலாம். மைக்ரோசாப்ட் ரீமில் பல சிறப்பான அம்சங்கள் உள்ளன. ஒரு வீடியோ சந்திப்பில், நிர்வாகி மற்றும் கற்பிப்பவர் இரண்டையும் காட்ட முடியும். மேலும், கையை உயர்த்தும்போது நீங்கள் படத்தில் இருப்பதை உறுதி செய்யும் ஒரு செயல்பாடு உள்ளது.

அவுட்லுக்கின் கலண்டரில் உள்ள சந்திப்புகள் இதில் ஒத்திசைக்கப்படுகின்றன, இதனால் ஒரு சந்திப்பின் போது ஒரு பயனர் 'பிஸியாக' காட்டப்படும் வாய்ப்புள்ளது. ரீம்ஸ் வழியாக மின்னஞ்சல் செய்திகளையும் இணைப்புகளையும் பகிர்வதும் எளிது. இந்த ஒருங்கிணைப்புகள் மைக்ரோசாப்ட் பயனர்களுக்கான ரீம்ஸின் மிகப்பெரிய நன்மைகளில் ஒன்றாகும்.

மைக்ரோசாப்ட் ரீம் சமீபத்தில் சத்தத்தை அடக்கும் தரத்தை மேம்படுத்தியுள்ளது, டாஸ்க்ஸ் ஆப்பைச் சேர்த்தது, பயனர்கள் பல கணக்குகளுடன் உள்நுழைய அனுமதித்தது மற்றும் ஆண்ட்ராய்டு செயலியில் டேட்டா சேவரைச் சேர்த்தது. மைக்ரோசாப்ட் ரீமின் விலை மிகஅடிப்படை வசதிகளுக்கு ஒரு பயனருக்கு மாதத்திற்கு 4.20 யூரோக்கள், பிரீமியத்திற்கு 10.50 யூரோக்கள் மற்றும் வணிகத்திற்கு 16.90 யூரோக்கள் என்றளவில் காணப்படுகின்றன.

### 2. கூகுள் மீட்

ஒருவரிடம் கூகுள் கணக்கு இருந்தால், கூகுள் மீட்டை அணுகலாம். இந்தப் பெயர்கள் சமீபத்தில் தான் வழங்கப்பட்டன. ஒரு வருடம் முன்பு வரை, இந்தச் சேவை 'ஹேங்கவுட்ஸ்' என்று அழைக்கப்பட்டது.

இதுவும் பயன்பாட்டின் எளிமையைக் கொண்டுள்ளது. இது சந்திப்புக்களுக்கு தெளிவானது மற்றும் எளிமையானது. திரையின் வலது பக்கத்தில் கூட்டங்களைத் திட்டமிடலாம், தொடங்கலாம் மற்றும் சேரலாம், பொது, வீடியோ மற்றும் ஓடியோ அமைப்புகளை சரிசெய்ய ஒரு பொத்தான் உள்ளது. பயன்படுத்த எளிதானது, வீடியோ அழைப்புகளில், செயல்பாடுகள் மிகவும் அடிப்படை கமரா மற்றும் மைக்ரோஃபோனை ஒன் (on) மற்றும் ஆஃப் (off) செய்வது நிலையான பொத்தான்கள் வழியாக செய்யப்படுகிறது. திரையைப் பகிர்வதற்கான வாய்ப்பும் உள்ளது அல்லது ஒரு சாளரமும் உள்ளது. ஒரு குறிப்பிட்ட விண்ணப்பம் கீழ் வலதுபுறத்தில் முழுத் திரையில் காண்பிப்பது மற்றும் விருப்பப்படி அமைப்பைத் தனிப்பயனாக்குவது போன்ற கூடுதல் விருப்பங்களைக் கொண்ட மெனு உள்ளது.

### 3. சிஸ்கோ வெபெக்ஸ்

சிஸ்கோவின் வெபெக்ஸ் இரண்டு பயன்பாடுகளுக்காக வடிவமைக்கப்பட்டது. இவை வெபெக்ஸ் கூட்டங்கள் மற்றும் வெபெக்ஸ் குழுக்கள் ஆகும். வெபெக்ஸ் குழுக்களுக்கு வீடியோ கான்பரன்சிங் வசதி உள்ளது. வெபெக்ஸ் செயலிக் கூட்டங்கள் அதாவது வீடியோ கான்பரன்சிங் மற்றும் ஒன்லைன் நிகழ்வுகளுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. வெபெக்ஸ் டெஸ்க்டாப் ஆப் அல்லது வெப் ஆப் மூலம் பயன்படுத்தக் கூடியது.

வெபெக்ஸில் திட்டமிடப்பட்ட கூட்டங்கள், ஏதேனும் இருந்தால், சமீபத்தில் பார்த்த கோப்புகளைக் காணலாம். கூட்டத்தை திட்டமிடும் போது, சந்திப்பின் நேரம், திகதி மற்றும் கால அளவு போன்ற நிலையான செயல்பாடுகளை அமைக்கலாம், தேவையான நபர்களை அழைக்கலாம். மேலும், நிகழ்ச்சி நிரல் உருப்படிகளையும் கூட்டத்திற்கான கடவுச்சொல்லையும் சேர்க்கலாம். மேலும், மற்ற சேவைகளைப் போலவே, விரும்பிய ஓடியோ சாதனங்களையும் தேர்ந்தெடுக்கலாம்,

நிர்வாகிகள் ஓடியோ மற்றும் வீடியோ இரண்டையும் தனித்தனியே பதிவு செய்யலாம். சந்திப்பில் பங்கேற்பாளர்கள் அந்த பதிவை இணைப்போடு பதிவிறக்கம் செய்யலாம். மேலும், பங்கேற்பாளர்களை முடக்கலாம். அனைத்து பங்கேற்பாளர்களும் சந்திப்பின் போது அரட்டையைப் பயன்படுத்தலாம், மேலும் கற்பிப்பவர் தங்கள் டெஸ்க் டாப், ஒரு குறிப்பிட்ட பயன்பாடு அல்லது வீடியோ கோப்புகள் உட்பட தங்கள் கணினியிலிருந்து கோப்புகளை அழைப்பில் உள்ள மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம். மிகவும் பயனுள்ள விடயம் என்னவென்றால், பகிர்வு இயக்கப்பட்டதா இல்லையா என்று பார்க்க நிர்வாகிகளுக்கு ஒரு அறிவிப்பு உள்ளது. இங்கு குறிப்புகளைப் பகிர மெய்நிகர் ஒயிட் போர்டைப் பயன்படுத்தவும் முடியும்.

சிஸ்கோ நிறுவனம் கடந்த டிசெம்பரில் வெப்எக்ஸுக்கு ஒரு பெரிய ஆம்பாட்டை அறிவித்தது. இரைச்சல் குறைப்பை மேம்படுத்தி தானியங்கி டிரான்ஸ்கிரிப்டினை இயக்குகிறது. சிஸ்கோ நிகழ்நேர மொழி பெயர்ப்பிலும் வேலை செய்கிறது.

வெபெக்ஸ் ஒரு இலவச பதிப்பில் கிடைக்கிறது, ஒரு ஸ்டார்டர் பதிப்பு ஒரு ஹோஸ்டுக்கு ஒரு மாதத்திற்கு 12.85 யூரோக்கள், ஒரு பிளஸ் பதிப்பு ஒரு ஹோஸ்டுக்கு ஒரு மாதத்திற்கு 17.30 யூரோக்கள் மற்றும் ஒரு வணிக பதிப்பு ஒரு ஹோஸ்டுக்கு ஒரு மாதத்திற்கு 25.65 யூரோக்கள் என்ற அடிப்படையில் கிடைக்கிறது.

### 4. ப்ளூஜீன்ஸ்

ப்ளூஜீன்ஸ் அநேகமாக 'எளிமையான' செயலியாக இனங்காட்டப்படுகிறது. ஆனால் இதில் இலவச பதிப்பு இல்லை, இங்கு வீடியோ கான்பரன்சிங்கில் மட்டுமே கவனம் செலுத்தப்படுகின்றது. ப்ளூஜீன்ஸ் பயன்பாட்டை இணைய உலாவியில் பயன்படுத்தலாம் அல்லது டெஸ்க்டாப் பயன்பாடாக நிறுவலாம்.

ப்ளூஜீன்ஸின் வடிவமைப்பு எளிமையானதும் தெளிவானதுமாகும். கூட்டத்தைத் திட்டமிடுதல், சேருதல் மற்றும் தொடங்குவது போன்ற கிக் - ஆஃப் செயல்பாடுகளையும் தொடக்கத் திரையில் நேரடியாக வாய்ப்படுகின்றது. அழைப்பின் போது, சந்திப்பைப் பதிவு செய்வது அல்லது திரையைப் பகிர்வது போன்ற முக்கியமான பொத்தான்கள் திரையின் மேற்புறத்தில் அமைந்துள்ளன.

பயனர்கள் தேர்வு செய்யக்கூடிய பல காட்சிகள் உள்ளன. எடுத்துக்காட்டாக, கற்பிப்பவர் மிகப்பெரிய திரையைப் பெற வாய்ப்புள்ளது. இதனால் 'மக்கள் பார்வை' கிடைக்கும். கற்பிப்பவரை மட்டும் காட்டும் விருப்பம் இருந்தால் இது சிறந்ததாகவுள்ளது. அதே வேளை அழைப்பின் போது ஒரே நேரத்தில் 25 வீடியோ வரை காட்ட வாய்ப்புள்ளது. ஓடியோ ஹெட்செட்டில் தெளிவாக மாநாட்டு அறையில் யார் பேசுகிறார்கள் என்பதை கேட்கலாம்.

ஒவ்வொரு பங்கேற்பாளருக்கும் ஒரு வீடியோ மற்றும் மைக்ரோஃபோன் ஐகான் உள்ளது, இதனை ஒரு மீட்டிங்கின் நிர்வாகி தனித்தனியாக அனைவரையும் முடக்க அல்லது மீண்டும் செயல்படுத்த பயன்படுத்தலாம். அனைவருக்கும் ஒரே நேரத்தில் இதைச் செய்வதற்கான வாய்ப்பும் உள்ளது. கூடுதலாக, ஒயிட்போர்டு மற்றும் நோட் செயல்பாடு கிடைக்கிறது, மேலும் கூட்டங்களை நேரடியாக பேஸ்புக் லைவ் மூலம் ஸ்ட்ரீம் செய்யலாம், இது வெபினார்கள் அல்லது நிகழ்வுகளுக்கு பயனுள்ளதாக இருக்கும். மூன்றாம் தரப்பினரால் தொந்தரவு செய்யக்கூடாது என்பதால், கூட்டங்களைப் பூட்டுவதற்கான விருப்பமும் உள்ளது. அதே காரணத்திற்காக, புதிய பங்கேற்பாளர்களின் அறிவிப்புகளை முடக்கலாம், அதனால் கூட்டங்கள் தடையின்றி நடக்கும்.

# தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் ஒன்றிணைந்து தமக்குள் பேச்சு!

## முதல் கட்டமாக நான்கு விடயங்களில் ஒருமித்துச் செயலாற்றுவதற்கு முடிவு

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 23

தமிழ் மக்களின் அரசியல் விடயங்களில் ஒருமித்த நிலைப்பாட்டில் செயல்படுவதற்காக தமிழ் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் மெய்நிகர் இணைய வழியின் ஊடாக சந்திப்பு ஒன்றை மேற்கொண்டனர்.

ஏறத்தாழ மூன்றரை மணி நேரம் இந்த கலந்துரையாடல. சுமுகமாக இடம் பெற்றது.

இச்சந்திப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாவை சேனாதிராஜா, எம்.ஏ. சுமந்திரன. எம்.பி., தமிழ் மக்கள் கூட்டணியின் சி.வீ.விக்னேஸ்வரன் எம்.பி., ரெலொவின் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., கோவிந்தன் கருணாகரம் எம்.பி., குருசுவாமி சுரேந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் என்.ஸ்ரீகாந்தா, ஈ.பி.ஆர்.எல். எவ்வின் சுரேஷ் பிறேமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

புளொட் தலைவர் சித்தார்த்தன் இதில் கலந்து கொள்வார் எனக் கூறப்பட்டது. எனினும் மெய்நிகர் உரையாடல் இணைப்பு ஏற்பாடு சீரமைக்கப்படுவதில் சிக்கல் நேர்ந்தமையால் அவர் பங்குபற்ற முடியாமல் போனதாக ஒரு தகவல் தெரிவித்தது.

இந்தச்சந்திப்புத் தொடர்பாக ரெலோ ஏற்பாட்டாளரும் அக்கட்சியின் பேச்சாளருமான குருசுவாமி சுரேந்திரன் தெரிவித்தவை வருமாறு:-

ஒருமித்த நிலைப்பாட்டில் செயலாற்றக் கூடிய விடயங்கள், எதிர்வரும் ஐ.நா. மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடர் மற்றும் தமிழ் தரப்பினரோடு அரசாங்கம் முயற்சிக்கும் பேச்சுவார்த்தை ஆகியவை முக்கிய விடயங்களாக கருத்தில் கொள்ளப்பட்டன.

ஏற்கனவே தமிழ் கட்சிகள் சந்தித்த கூட்டங்களில் ஒருமித்த நிலைப்பாட்டில் செயலாற்றக் கூடிய விடயங்களை அடையாளப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பட்டியலிடப்பட்ட விடயங்களில் மிக முக்கியமாக, முதல் கட்டமாக ஒருமித்த நிலைப்பாட்டில் இணக்கம் காணப்படுவதற்கு நான்கு விடயங்கள் அடையாளப்படுத்தபட்டன.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கான கோரிக்கை, அரசியல் கைதிகள் விடுதலை, தாயகப் பரப்பில் நடைபெறும் திட்டமிட்ட காணி அபகரிப்பு நடவடிக்கைகளை நிறுத்துதல் மற்றும் அரசியல் யாப்பில் உள்ள 13 ஆவது திருத் தச் சட்டத்தை முற்றாக நடைமுறைப் படுத்த அரசையும் இந்தியாவையும் கோருதல் என்பவையாகும்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை எம்முடைய தீர்வாக ஏற்க முடியாது. ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்பது சாத்தியமில்லை என்பது அனைவருடைய நிலைப்பாடாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இருப்பினும் அரசியல் யாப்பில் இருக்கக்கூடிய 13ஐ நிறைவேற்ற அரசு முன் வருவது நல்லிணக்க நடவடிக்கையாகக் கருத முடியும் என தீர்மானிக்கப் பட்டது.

இந்த விடயங்களில் காத்திரமாக ஒருமித்து செயலாற்றுவதென தீர்மானிக்கப் பட்டது. அதேவேளை மற்ற விடயங்களையும் கட்டம் கட்டமாக ஒருமித்து எதிர் காலத்தில் முன்னெடுக்கவும் இணக்கம் காணப் பட்டது.

அரசியல் தீர்வு சம்பந்தமாக அரசுடனான பேச்சுவார்த்தை நடத்துவது அவசியம். ஆயினும் அது தமிழ் மக்களின் நலன்களுக்காக அமைய வேண்டும் என்பதிலும் சர்வதேச அழுத்தங்களில் இருந்து அரசு தப்பிக்க இடமளிக்க கூடாது என்பதிலும் நாம் உறுதியாக இருக்க வேண்டும் என முடிவு எட்டப் பட்டது. போருக்கு முன்னும் பின்னும் அரசின் திட்டமிட்ட நடவடிக்கைகளால் தமிழ் மக்கள் முகம் கொடுத்திருக்கும் பல பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வருவது அவசியமாகும். இது பேச்சுக்கான ஒரு நல்லிணக்க நடவடிக்கையாக அமைவதோடு சாதகமான சூழலையும் ஏற்படுத்தும். ஆகவே சம்பந்தப் பட்ட தரப்புகளிடம் தமிழ் கட்சிகள் ஒருமித்த நிலைப்பாட்டில், மேல்குறிப்பிட்ட இணக்கம் காணப்பட்ட விடயங்கள் உட்பட மற்றும் பல விடயங்களையும் உள்ளடக்கிய கோரிக்கையை முன் வைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

வரவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் 46/1 பிரேரணை சம்பந்தமாக ஐநா மனித உரிமை ஆணையாளரின் வாய்மூல அறிக்கை சமர்ப்பிக்கப்பட இருக்கிறது. இதன் பொருட்டு தமிழ் தரப்பினால் ஒருமித்து அறிக்கை ஒன்று தயாரித்து சமர்ப்பிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

அதில், 46/1 பிரேரணையில் உள்ள விடயங்களை அரசு நிறைவேற்றாமலும் அதேவேளை அவற்றிற்கு எதிராகவும் செயற்படுவதை சுட்டிக்காட்டியும், குறிப்பாக பிரேரணை நிறைவேற்றப்பட்ட பின்னர் அரசினால் தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளின் விவரங்களையும் உள்ளடக்குவது என்று இணக்கம் காணப்பட்டது.

மூன்றரை மணி நேரம் நடைபெற்ற இந்த கலந்துரையாடல் மிக ஆரோக்கியமான முறையில் நடைபெற்றதோடு மீண்டும் விரைந்து சந்திப்பதற்கான ஒத்திசைவுடன் பிற்பகல் இரண்டு முப்பது மணிக்கு நிறைவு பெற்றது. - என்றார்.

## நாட்டில் இந்தப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் இறக்குமதி செய்யப் பட்ட சீனியில் பலகோடி ரூபா மோசடி செய்யப்பட்டது எனக் கூறப்படும் நிலையில் அரச உத்தியோகத்தர்களிடம் அரை மாத சம்பளத்தைத் தரும்படி அரசு கேட்பது வேடிக்கையாக உள்ளது.

சீனிக்கான இறக்குமதி வரியை நீக்கி மக்களுக்குச் சலுகை வழங்குவதாகக் கூறிய அரசு நிவாரணத்தை மக்களுக்கு வழங்காமல் தமக்கு இசைந்த வர்த்தகர்களுக்குச் சீனி வர்த்தகத்தில் பாரிய இலாபத்தைப் பெற வைத்தார்கள்.

குறித்த வர்த்தகம் தொடர்பில் எதிர்க் கட்சிகள் பல குற்றச்சாட்டுகளை முன் வைத்தபோதும் சம்பந்தப்பட்டவர்களிடம் இருந்து எவ்விதமான நிதியும் அறவிடப்படப் படவில்லை.

கொரோனா சூழ்நிலையை அரசானது உரிய செயற்றிட்டங்கள் இன்றி கையாள நினைத்தமையால் தற்போது நாடு பாரிய அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளது.

சுகாதாரத்தரப்பினர் மற்றும் புத்திஜீவிகளின் கருத்துக்களைச் செவிமடுக்காமல் - அவர்களை மதிக்காமல் காலத்தைக் கடத்திய ஆட்சியாளர்கள் தற்போது கண்டி மகாநாயக்கர்களின் கோரிக்கையை அடுத்து நாட்டை முடக்குவதற்கு முன் வந்தனர்.

பத்து நாள்கள் முடக்கத்தை அறிவித்த நிலையில் கடந்த முறையும் 5, 000 ரூபா கொடுப்பனவு உரிய முறையில் கிடைக்காத நிலையில் தற்போது 2, 000 ரூபா வழங்கப்படும் அரசு என கூறுவது நகைப்புக்குரிய விடயமாகும்.

10 நாள்களில் பொது முடக்கத்தை அறிவித்துவிட்டு 2, 000 ரூபாயை வழங்குவது ஒரு குடும்பத்துக்கு எத்தனை நாள்களுக்குப் போதுமானது என்ற கேள்வி எழுகின்றது.

ஆகவே, நாடு தற்போது கொரோனா சூழலால் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் பொருளாதார ரீதியில் மக்களுக்குப் பாரிய நெருக்கடி நிலைமையை ஏற்படுத்தியுள்ளது.

மக்களுக்கு ஒரு கால அவகாசத்தை கொடுத்துப் பொது முடக்கத்தை அரசு அறிவித்திருக்க வேண்டும் - என்றார்.

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளின் முடிவுகள் சில நேற்றிரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் 94 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதில் மகாறம்பைக்குளம், தவசிகுளம், புதிய சாலம்பைக்குளம், மறவன்குளம் ஆகிய பகுதிகளிலேயே அதிகளவிலான தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், தொற்றாளர்களைக் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களைச் சுய தனிமைப் படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நினைவகலா நினைவுகள்


பிறப்பு 21 * 10 * 1937
இறப்பு 23 * 08 * 2012
இந்திரராசா செங்காரபிள்ளை
(சாங்கர்)


பிறப்பு 11 * 02 * 1936
இறப்பு 29 * 08 * 2009
செங்காரபிள்ளை
பூரணபாக்கியம்

நேற்று வரை எம்முடன் வாழ்ந்தீர்கள் என்றே
உள்ளத்து உணர்வலைகள்
ஆசையுடன் அசைபோடுகின்றன - என்றாலும்
உங்கள் ஆத்மா சாந்திபெற
இறைவனை இறைஞ்சி அஞ்சலிக்கின்றோம்.

505, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# இரண்டு ஆயிரம் ரூபா எவ்வளவு காலத்துக்கான கொடுப்பனவு?

## அரசாங்கத்திடம் மக்கள் சக்தி கேள்வி

கொழும்பு, ஒக. 23

இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவு எவ்வளவு காலத்திற்கான கொடுப்பனவு என ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி எழுப்பியுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் இதனை வினவியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் -

இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவு தற்பொழுது அமுல்படுத்தப்பட்டுள்ள பத்து நாள் ஊரடங்குச் சட்டத்துக்கானதா அல்லது எவ்வளவு காலத்துக்கானது என்பதை அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த வெள்ளிக்கிழமை ஆற்றிய உரையில் கூறப்பட்ட விடயங்களின் உண்மைத் தன்மை தொடர்பாகக் கண்டறியப்பட வேண்டியுள்ளது.

ஊரடங்குச் சட்டத்தின் ஊடாக அரசாங்க ஊழியர்களின் சம்பளங்களை குறைக்க திட்டமிடப்படுகின்றதா என்ற வலுவான சந்தேகம் எழுந்துள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

நீண்ட காலம் நாட்டை முடக்க நேரிட்டால் மக்கள் அர்ப்பணிப்புக்களைச் செய்ய ஆயத்தமாக வேண்டுமென ஜனாதிபதி நேற்று கோரியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானிஸ்தானில் இருந்து 46 இலங்கையர் வெளியேற்றம்

ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றிய பின்னர் அங்கிருந்து ஏராளமானோர் வெளியேறி வருகின்றனர்.

அந்த வகையில் இலங்கையும் அங்கிருக்கும் இலங்கையர்களை நாட்டுக்குக் கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானிலுள்ள 86 இலங்கையர்களில் 46 பேர் வெளியேற்றப்பட்டுள்ளார்கள்.

மேலும், 20 பேர் இலங்கை வர எதிர்பாத்துள்ளதோடு, 20 பேர் அங்கேயே தங்கி இருக்க விருப்பம் தெரிவித்துள்ளார்கள் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

# ஆடை தைக்க சென்ற சிறுமி மட்டக்களப்பில் காணோம்



மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 16 வயதுடைய சிறுமி ஒருவர் உறவினர் வீட்டுக்கு ஆடை தைப்பதற்காக சென்ற நிலையில் காணாமல் போயுள்ளார் என சிறுமியின் அம்மம்மா முறைப்பாடு செய்துள்ளார் எனக் காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

புதுக்குடியிருப்பு புளியடி வீதியைச் சோந்த 16 வயதுடைய சிறுமியான தவராசா சசீக்கா என்பவரே காணாமல் போயுள்ளார்.


குறித்த சிறுமியின் தந்தை இல்லாத நிலையில் தாயார் வேறு திருமணம் முடித்து சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி சிறுமியும் அவரது அக்காவான சகோதரியும் அவர்களுடைய அம்மம்மாவின் பராமரிப்பில் வாழ்ந்து வருகின்றனர் எனவும் சம்பவதினமான கடந்த புதன்கிழமை சிறுமியின் சகோதரி வேலைக்குச் சென்ற நிலையில் பிற்பகல் 1.30 மணியளவில் உறவினரின் வீட்டில் ஆடை தைப்பதற்கு செல்கிறேன் என அம்மம்மாவிடம் தெரிவித்து வீட்டை விட்டு வெளியேறியுள்ளார்.

இந்த நிலையில் இரவாகியும் சிறுமி வீடு திரும்பாதமையை அடுத்து அவரைத் தேடிய போதும் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை எனவும் சிறுமி காணாமல் போயுள்ளார் எனப் பொலிஸ் நிலையத்தில் சிறுமியின் அம்மம்மா முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பேராயர் கர்தினாலின் வேண்டுகோளை புறக்கணித்தனர் மட்டக்களப்பு மக்கள்






உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் நீதி நிலை நாட்டப்படாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த சனிக்கிழமை கறுப்புக் கொடியை ஏற்றுமாறு பேராயர் விடுத்த வேண்டுகோள் மட்டக்களப்பு மக்களால் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

ஈஸ்டர் தினத்தன்று மட்டக்களப்பு உட்பட நாட்டின் பல பகுதிகளில் உள்ள தேவாலயங்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்புகளில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்திருந்தமையுடன், படுகாயங்களும் அடைந்திருந்தனர்.

இந்த நிலையில் ஞாயிறு தாக்குதலுக்குக் காரணமானவர்கள் மீது எடுக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கை திருப்தி அளிக்கவில்லை எனக் கடந்த ஜுலை மாதம் 19 ஆம் திகதி கத்தோலிக்க திருச்சபை ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தது.

அதனடிப்படையில், தாக்குதலுக்குக் காரணமானவர்களை இதுவரையில் இனங்காண அரசாங்கம் தவறிய காரணத்தால், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கடந்த சனிக்கிழமை நாடு முழுவதும் கறுப்புக் கொடி ஏற்றுமாறு பேராயர் மல்கம் ஆண்டகை வேண்டுகோள் விடுத்திருந்தார்.

எனினும் சனிக்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள எந்த தேவாலயத்திலும் கறுப்புக்கொடிகள் ஏற்றப்படவில்லை.

குறிப்பாக உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குள்ளான சியோன் தேவாலயத்தில் கூட கறுப்புக்கொடியைக் காண முடியவில்லை.



11

**வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவத்தையொட்டி 'காலைக்கதிர்' நடாத்தும்**

# மாபெரும் சைவ சமய அறிவுப் போட்டி - 2021

## போட்டி விதிகள்

1. இந்தப் போட்டியில் ஆர்வமுடைய அனைவரும் பங்குபற்ற முடியும்.
2. 13.08.2021 முதல் எதிர்வரும் 06.09.2021 வரை காலைக்கதிரில் தினமும் வெளியாகும் கேள்விகளுக்குச் சரியான விடைகளை இதே தாளில் எழுதி, கூப்பனிலுள்ள விவரங்களை நிரப்பி அனுப்புவதன் மூலம் போட்டியினுள் நுழையலாம்.
3. சரியான விடைகளை எழுதி அனுப்புவர்களில் இருந்து தினமும் குலுக்கல் முறை மூலம் அந்த நாளுக்குரிய வெற்றியாளர் தெரிவு செய்யப்படுவார். அத்துடன் முழு நாள்களிலும் சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று பேருக்கும் பணப் பரிசில்கள் உண்டு

## பரிசு விவரம் :

| | |
|---|---|
| முழுப் போட்டிக்குமான முதலாம் இடம் - | ரூபா 7,000.00 |
| இரண்டாம் இடம் - | ரூபா 5,000.00 |
| மூன்றாம் இடம் - | ரூபா 3,000.00 |
| தினசரி வெற்றியாளர்கள் ஒவ்வொருவருக்கும் தலா - | ரூபா 1,000.00 |

4. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம்.
5. பரிசுக்குரியவர்கள் எதிர்வரும் 12.09.2021 அன்று காலைக்கதிர் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படுவார்கள்.
6. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

**1. போர்த்துக்கீசர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போது மிகப் புராதனமான நல்லூர் ஆலயத்தை இடித்தழிக்க உத்தரவிட்ட போத்துக்கீசத் தளபதி யார்?**

..........................................................................

**2. சைவ சமய எழுச்சிக்காக வித்தியானுபாலனயந்திரசாலை எனும் அச்சகத்தை நிறுவியவர் யார்?**

..........................................................................

**3. நல்லைக் கலிவெண்பாவை எழுதியவர் யார்?**

..........................................................................

**4. சைவ சமயக் குரவர்கள் என்று அழைக்கப்படுபவர்கள் யாவர்?**

..........................................................................

**5. இலங்கையின் வடபுலத்தில் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமையப் பெற்ற , திருத்தம்ப லேசுவரர் என்றும் பெயர் கொண்ட சிவாலயத்தில் எழுந்தருளியுள்ள இறைவியின் பெயர் என்ன?**

..........................................................................

**சரியான பதில்கள், கூப்பன்களுடன் இணைக்கப்பட்டு தபால் மூலமாகவோ, நேரடியாகவோ கிடைக்கக் கூடியவாறு எதிர்வரும் 01.09.2021 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.**

**காலைக்கதிர் - பசுமை ஊடக இல்லம்**
**30, கல்லூரி வீதி,**
**யாழ்ப்பாணம்**

11

பங்குபற்றுபவர்களின் விவரங்கள்:-

1. முழுப் பெயர் : ----------------------------------------
2. பிறந்த திகதி : ----------------------------------------
3. கல்வி கற்கும் தரம் : ----------------------------------------
4. பாடசாலை : ----------------------------------------
5. முகவரி : ----------------------------------------

..............................................
கையொப்பம்

# கொவிட் வைரஸிற்கு அச்சப்பட்டு முகக்கவசங்களை அணியுங்கள்!

## பேராசிரியர் திஸ்ஸ விதாரண வேண்டுகோள்



கொவிட் -19 வைரஸ் பரவலை அரசாங்கத்தால் மாத்திரம் கட்டுப்படுத்த முடியாது. மக்களும் முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட வேளை பெரும்பாலானோர் மதுபான சாலைகளுக்கு முன்பாக செயற்பட விதம் வெறுக்கத்தக்கது. ஊரடங்குச் சட்டத்தை மீறுபவர்களுக்கு எதிராக கடுமையான தண்டனை அவ்வேளையிலே வழங்க வேண்டும்.

பாதுகாப்புத் தரப்பினருக்கு பயந்து முகக்கவசத்தை அணிய வேண்டாம், கொவிட் வைரஸுக்குப் பயந்து பொது மக்கள் முகக்கவசத்தை அணிந்து பொறுப்புடன் செயற்பட்டால் கொவிட் தாக்கத்தை வெற்றிகொள்ள முடியும் என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவரும், நாடாளு மன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டமை தொடர்பில் வினவிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தை கருத்திற் கொண்டு தற்போது நாடுதழுவிய ரீதியில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

அரசாங்கம் அனைத்துக் காரணிகளையும் கருத்திற் கொண்டு ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்தியுள்ளது. தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் சுகாதாரம், பொருளாதாரம் ஆகிய இரண்டு விடயங்கள் தொடர்பாகவும் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தால் கொவிட் தாக்கத்தை கட்டுப்படுத்தும் செயற்பாடுகளும், மருத்துவத் துறையில் ஏனைய செயற்பாடுகளும், அரச செயலொழுங்கும் முழுமையாக பாதிக்கப்படும் ஆகவே அனைத்து விடயங்களையும் ஆராய்ந்தே செயற்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# எம்.பிக்கள் சம்பளத்தில் பாதியை நன்கொடையாக வழங்குங்கள்!

## அமைச்சர் வாசுதேவ கோரிக்கை



அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் தங்கள் சம்பளத்தில் பாதியை கொவிட் நிதிக்கு நன்கொடையாக வழங்குமாறு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கோரிக்கை விடுத்துள்ளார்.

செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

'பணம் இல்லாத மக்கள் பிரதிநிதிகளிடம் இந்த கோரிக்கையை நாங்கள் முன்வைக்கவில்லை. ஆனால் வருமானம் உள்ள அனைத்து எம்.பிக்களும் இந்த நேரத்தில் தங்கள் சம்பளத்தில் பாதியை நன்கொடையாக வழங்க முன்வர வேண்டும்.

அது மிகவும் முக்கியமானது என்பது என் உணர்வு. நம் நாட்டில் வசிப்பவர்கள் மற்றும் வெளிநாடுகளில் உள்ளவர்கள் அனைவரும் தங்கள் வருமானத்தின் ஒரு பகுதியை இந்த நேரத்தில் நன்கொடையாக வழங்குவது பயனுள்ளது.

இது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல அனைத்து வணிகர்களுக்கும் பொருந்தும் என்று அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மேலும் கூறியுள்ளார்.

# அன்டிஜன் பரிசோதனை உபகரணம் 2 ஆயிரத்து 500 ரூபாவுக்கு விற்பனை

## ஜனாதிபதிக்கு ஓமல்பே தேரர் கடிதம்

கொவிட் தொற்றாளர்களை இனங்காண்பதற்கு பயன்படுத்தப்படும் 'அன்டிஜன்' பரிசோதனை உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு 80 ரூபா மாத்திரமே செலவாகுகின்றபோதிலும், இந்தப் பரிசோதனை உபகரணங்கள் பொது மக்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபாவுக்கு விற்கப்படுவது தொடர்பாக கவனத்தில் கொள்ளும்படி இலங்கை ராமாஞ்ஞ பௌத்த மத பீடத்தின் பிரதான தேரர் கலாநிதி ஓமல்பே தேரர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

10 பிரிவுகளைக் கொண்ட 'அன்டிஜன்' பரிசோதனை உபகரணங்களை இலங்கைக்கு தருவிப்பதற்கு 4 டொலர் செலவாகும். இது இலங்கை ரூபா மதிப்பில் 800 ஆகும்.

இந்த உபகரணத்தில் 10 பிரிவுகள் உள்ளன. அப்படியானால், ஓர் அன்டிஜன் உபகரணப் பிரிவுக்கு 80 ரூபா மாத்திரமே செலவாகுமென தேரர் சுட்டிக்காட்டினார்.

இதன்படி, கொவிட் பரிசோதனை செய்பவரிடம் 2 ஆயிரத்து 400 ரூபா வரையிலான பணம் அதிகமாக அறவிடப்படுவதைக் காணமுடிகிறது.

ஆகவே, இதனை யார் செய்கிறார்கள் என்பதை தேடிப் பார்க்கும்படியும், அதற்கான நடவடிக்கைகளை உடன் எடுக்கும்படியும் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அன்டிஜன் உபகரணங்களை இந்திய பண மதிப்பில் 150 ரூபாவுக்கு (450 இலங்கை ரூபா) இணையத்தளத்தின் ஒன்லைன் ஊடாகவோ அல்லது மருந்தகங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

இவ்வாறான நிலையில், இந்த அன்டிஜன் பரிசோதனை உபகரணங்களை இலங்கை மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் ஊடாக பொது மக்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்படி அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஜனாதிபதியின் செயற்பாட்டால் அஜித் நிவாட் கப்ரால் அதிருப்தி

சமகால அரசாங்கத்துக்குள் உள்ளக மோதல்கள் தீவிரம் அடைந்துள்ளன என தென்னிலங்கை ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுக்கு அதிகளவான அதிகாரங்கள் வழங்குகின்றமை தொடர்பில் இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

தனது அமைச்சின் கீழ் மீதமாக உள்ள ஒரே நிறுவனத்தையும் நாமல் ராஜபக்ஷவுக்கே வழங்குங்கள் என நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்து அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அனுப்பிய கடிதத்தின் பிரதிகளை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுக்கும் அனுப்பி வைக்க அஜித் நிவாட் கப்ரால் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இறுதியாக மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை திருத்தத்தின் போது நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ராலிடம் இருந்த நிறுவனங்கள் மற்றும் பொறுப்புகள் பல நாமல் ராஜபக்ஷவிடம் வழங்கப்பட்டுள்ளன. இதனால் அதிருப்தியடைந்த அஜித் நிவாட் கப்ரால் இந்தக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார். அதற்கமைய அஜித் நிவாட் கப்ராலிடம் மீதமான ஒரே ஒரு நிறுவனம் மாத்திரமே உள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

## நாவலடி பகுதியில் கைக்குண்டு மீட்பு

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவலடி கடற்கரை பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் கைக்குண்டொன்று கடந்த சனிக்கிழமை மாலை 4 மணியளவில் மீட்கப்பட்டுள்ளது.

நாவலடி கடற்கரைக்கு அண்மித்த சவுக்குக் காட்டுப் பகுதியில் குறித்த குண்டு கைவிடப்பட்ட நிலையில், இராணுவத்தினருக்கு கிடைத்த தகவலையடுத்தே மீட்கப்பட்டுள்ளமையுடன், இராணுவத்தினர் குறித்த இடத்தில் பாதுகாப்புக் கடமைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மருத்துவ உபகரணங்கள் வழங்கியது பாகிஸ்தான்

இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் ஓய்வுப் பெற்ற மேஜர் ஜெனரல் உயர்ஸ்தானிகர் முஹம்மது சாத் கட்டாக் கடந்த சனிக்கிழமை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் சந்தித்து கொவிட்-19 நோயாளர்களின் சிகிச்சைக்குத் தேவையான மருத்துவ உபகரணங்களை வழங்கி வைத்தார்.

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தை வெற்றிக் கொள்வதற்காக இலங்கை அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கில் பாகிஸ்தான் அரசாங்கத்தால் வழங்கி வைக்கப்பட்ட இந்த மருத்துவ உபகரணங்களில் பாகிஸ்தான் நாட்டில் தயாரிக்கப்பட்ட 75 வென்டிலேட்டர் கருவிகள், 150 செயற்கை சுவாசக் கருவிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கொவிட் கட்டுப்பாட்டுக்கு வலய நாடுகள் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும். பாகிஸ்தான் சார்க் கொவிட்-19 அவசர உதவியின் கீழ் மருத்துவ உபகரணங்கள் இவ்வாறு வழங்கி வைக்கப்பட்டன.

பாகிஸ்தான் அரசாங்கம் வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றியைத் தெரிவித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இரு நாடுகளும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டிய அவசியத்தை இந்தச் சந்திப்பின் போது சுட்டிக்காட்டினார்.

# சீனியுடன் ரவை கலந்து வவுனியாவில் விற்பனை

வவுனியாவில் சீனி, ரவை கலந்து விற்பனை செய்யப்படுகின்றன என நுகர்வோர் குற்றம் சாட்டியுள்ளனர். நாடு முடக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்ட நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை மக்கள் வர்த்தக நிலையங்களில் குவிந்து பொருள்களைக் கொள்வனவு செய்திருந்தனர்.


இந்த நிலையில் சீனியின் விலை அதிகரித்துள்ளதால் சில வர்த்தக நிலையங்களில் சீனியில் ரவையைக் கலந்து விற்பனை செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக வவுனியா நுகர்வோர் அதிகார சபையிடம் சில நுகர்வோர் முறைப்பாடுகளை தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.08.2021 இல் வெளியிடப்பெற்றது.

# ‘கொரோனா’வின் கோரத்தாண்டவம்

ஒரு நிமிட சந்தோஷம் ஒரு மனிதனின் நோய் எதிர்ப்பு சக்தியை 14 நாள்களுக்கு அதிகரிக்குமாம். அதேபோல் ஒரு நிமிட கோபம் ஒரு மனிதனின் நோய் எதிர்ப்புச் சக்தியை நான்கு நாள்களுக்குக் குறைத்து விடுமாம். அந்தவகையில், கொரோனாத் தடுப்பூசிகள் எம்மைக் காப்பாற்றிவிடுமா என்பதை உறுதியாகக் கூற இயலாது. ஆனால், தடுப்பூசி ஏற்றிய பின்பு, நான் தடுப்பூசி ஏற்றிவிட்டேன். இனி எந்த நோயும் என்னை எதுவும் செய்துவிட முடியாது என்ற சந்தோஷமே எம்மைப் பல நாள்கள் வாழ வைத்துவிடும்.



ஜெஸீபாத் பாத்திமா றிஸ்லா
தரம் - 13 (விஞ்ஞானப் பிரிவு)
திருமலை ஸாஹிரா கல்லூரி.

ஊரும் முடங்க, உலகமும் முடங்க, கல்வி கடல் மாத்திரம் எம் போன்ற கப்பல்களை சுமந்து ஆர்ப்பரிக்க, கரைசேர்ந்து விடலாம் என்ற நம்பிக்கையில் உயர்தர மாணவர்களாகிய நாம் இன்னமும் இருக்கின்றோம்.

இலங்கையில் கடந்த ஒன்றரை வருடங்களாகக் கொரோனாவின் கோரப்பிடி பற்றிய உள்ளக் குமுறல்களை உண்மையாக உரைக்கின்றோம் கேளீர்.

இலட்சியக் கனவுடன் உயர்கல்வியைத் தொடர்ந்து இரண்டே மாதங்களில் எம் இலட்சியப்பாதையில் இடி விழுந்து விட்டது . சீனாவின் வூஹான் நகரில் பரவிய கொரோனாத் தொற்று இலங்கையிலும் பரவியதால் வகுப்புகள் அனைத்தையும் காலவரையறை இன்றி மூடிவிடுமாறும், பிற ஊர்களில் இருந்து வந்த மாணவர்களை தமது சொந்த இடங்களுக்கே திரும்பி விடுமாறும் அரச தரப்பினர் அறிவிப்பு விடுத்தனர். செய்வதறியாது புத்தகங்கள், பயிற்சிக் கொப்பிகள், ஓரிரண்டு ஆடைகள் என்பவற்றை எடுத்தும் எடுக்காமலும் சொந்த ஊருக்கே திரும்பினோம்.

குடியிருக்காத வீட்டுக்கு வாடகை செலுத்திக் கொண்டும், நடைபெறாத வகுப்புகளுக்குக் கட்டணங்கள் செலுத்திக் கொண்டும் காலங்கள் ஓடின. இது சுயசரிதை என நினைத்து முகம் சுளித்து விடாதீர்கள்.

கொரோனாவின் கோரத் தாண்டவத்துக்கு எம் வாழ்க்கை மட்டும் விதிவிலக்கல்ல என்பதைக் கூற முயல்கின்றோம்.

மனிதன் நாகரிகம் என்ற பெயரில் நாசத்தை விதைக்கத் தொடங்கினான். காடு வெட்டி களனி செய்தல் என்ற கருத்தை மாற்றி காடுகளை வெட்டி ஆங்கே கட்டடங்களை நட்டான். மாரியை கோடையாகவும் கோடையை மாரியாகவும் பருவங்களை மாற்றியமைத்தான். இறுதியில் காலம் தன் பொறுமை இழந்து மனிதனுடன் போர்தொடுக்கத் தொடங்கியதன் விளைவே இந்தக் கொரோனா எனும் கொடிய நோய்.

இயற்கையிடம் மனிதன் தோற்றுப் போனான். வீடுகளுக்குள் முடங்கினான். வெளியே செல்ல முடியாது, வேண்டியதைப் பெற முடியாது, தாயை, பிள்ளையை, கணவனை, மனைவியைக் காண முடியாது. இவ்வாறு மனிதனோ நரகத்தை உணர வழியெங்கும் சுத்தம், பறவைகளின் சத்தம், மரங்களின் சலசலப்பு , நீரோடைகளின் ஆர்ப்பரிப்பு என உலகம் உல்லாச மேடையின் உச்சத்தில் ஊஞ்சலாடியது .

நாள்கள் பல நகர்ந்தோடின. பற்பல நாடுகளும் கொரோனாவுக்கான மருந்துகளைத் தயாரிப்பதில் களம் இறங்கியது. மானிடப் பிறவியின் உன்னதத்தை மனிதன் உணர்ந்தானோ என்னவோ, இந்தியாவில் 13 வயதுச் சிறுவன் முதல் இங்கிலாந்தில் 73 வயது முதியவர் வரை அனைவருமே கொரோனாவுக்கான மருந்துகளை உருவாக்குவதில் ஈடுபட்டனர் .

அனைத்து நாடுகளுமே கொரோனாவுக்கான தடுப்பூசிகளையும், எதிர்ப்பு மருந்துகளையும் தயாரிப்பதற்காகப் பலகோடி பணத்தை செலவழித்தும் அனைத்தும் வீண் செலவாகிப்போனது. சித்த வைத்தியம், சீன வைத்தியம், ஆங்கில வைத்தியம் என அனைத்தும் தோல்வியடைய எம் பாரம்பரிய பாட்டி வைத்தியமே பட்டி தொட்டி எங்கும் பரவியது. இஞ்சி மஞ்சளும் கொத்தமல்லியுமே கொரோனாவைக் கொல்லும் ஆயுதமாக மாறியபோதும் ஆரம்ப காலத்தில் ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த காரணத்தால் என்னவோ, ஆங்கிலேய அம்சங்களுக்கு எம் உடலும் உள்ளமும் அடிமையாகி விட்டது .

கொரோனாவின் ஆரம்பத்தில் மலேரியா நோய்க்கான தடுப்பூசியே கொரோனாத் தொற்றாளர்களுக்கும் செலுத்தப்பட்டது. அது ஓரளவு பயனளிக்கக் கூடியதாகவும் இருந்தது. எனினும், அது கொரோனா வைரஸுக்கு எதிராக நூறு சதவீதம் போராடும் வல்லமை அற்றது. ஏனெனில், மலேரியா நோய்க்குரிய மருந்தானது அந்த நோய்க்குரிய நோய்க்காரணிக்கே முழுமையான தூண்டலை வழங்கக்கூடியதாக இருக்கும் . அதேபோல் கொரோனா நோய்க்காரணியும் அதற்குரிய நுண்ணங்கி எதிர் பதார்த்தங்களுக்கே தூண்டற்பேறைக் காட்டக்கூடியதாக இருக்கும்.

ஆனால், தற்சமயம் உலகளாவிய ரீதியில் பல்வேறு நாடுகளும் கொரோனாவுக்கான தடுப்பூசிகளை கண்டறிவதில் வெற்றி கண்டுள்ளன. எனினும், இந்தத் தடுப்பூசிகள் முற்றிலும் கொரோனா நோய்க்காரணியை அழிக்கக் கூடியவையா? இக்கேள்விக்கான பதிலை யாராலும் உறுதியாகக் கூறிவிட முடியாது. ஏனெனில் தடுப்பூசி ஏற்றிய பின்பும் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட 400 இற்கும் மேற்பட்ட தொற்றாளர்கள் சீனாவில் இனங்காணப்பட்டுள்ளனர். இந்தத் தகவலானது மக்கள் மத்தியில் தடுப்பூசி மீதான நம்பிக்கையை குறைவடையச் செய்துள்ளமையுடன் சீனாவின் தடுப்பூசிகள் பற்றி பெரும் சர்ச்சையையும் ஏற்படுத்தியுள்ளது .

இந்தச் சர்ச்சை ஒருபுறம் கிடக்க இன்று மாபெரும் சர்ச்சையாக மாறி இருப்பது அரசால் இலவசமாக வழங்கப்படுகின்ற இந்தத் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்வதா? இல்லையா? என்ற பொதுமக்களின் முடிவு.

இலவசம் என்றாலே அது மக்களின் மத்தியில் ஒரு பீதியை உண்டாக்கத்தான் செய்கின்றது. அதுவும் குறிப்பாக எமது நாட்டில் சொல்லித் தீர்ப்பதற்கில்லை. உதாரணமாகப் பார்க்கப்போனால், நாம் யாவரும் அறிந்ததே இந்த அனுதாப 5,000 ஆயிரம் ரூபா . ஊரடங்கு காலத்தில் சமுர்த்திப் பயனாளிகளுக்கு நிவாரண உதவி என்ற பெயரில் 5 ஆயிரம் ரூபாவை வழங்கி விட்டு அடுத்த மாதமே மின் கட்டணத்தை மடங்காக அதிகரித்த மகாபிரபுக்களின் மகாசாசனம் இது (இலங்கை). அது ஒரு புறம் கிடக்க, இம்முறையும் அப்பாவி ஏழை ஜனங்களுக்கு 5 ஆயிரம் ரூபாவைக் கொடுப்பது போல் கொடுத்து விட்டு மறுபுறம் எரிபொருள்களின் விலையை எட்டமுடியாத அளவுக்கு உயர்த்தி விட்டனர்.

இப்படியாகக் கொடுப்பது போல் கொடுத்து விட்டு கொடுத்ததற்கும் மேலாக பறிப்பதுதான் இலவசம் என்றால், மக்களின் உயிரைக் காப்பாற்றுவதற்காக என்ற பெயரில் தடுப்பூசியை இலவசமாக வழங்கி விட்டு எம் உயிரையும் உறிஞ்சி விடமாட்டார்கள் என்பதில் என்ன நிச்சயம்? என்பது மக்களின் மனதில் மாபெரும் கேள்விக்குறியாக உள்ளது. ஆனால், இவை யாவும் மக்களின் மனதில் உள்ள வீண் சந்தேகங்களும், பதற்றங்களுமாகும்.

ஏனெனில் அரசு என்பது குடிமக்களை மையமாகக் கொண்டது. குடிமக்களைக் கொன்றுவிட்டு தனிக்காட்டுக்கு ராஜாவாக இருக்க எந்தவொரு தலைவரும் விரும்புவதில்லை. இதற்கு எந்த நாட்டுத் தலைவரும் விதிவிலக்கல்ல. நாட்டையும் நாட்டு மக்களையும் நல்நிலையடையச் செய்வதே ஒவ்வொரு தலைவரினதும் குறிக்கோளாகும் (ஒரு சில தேசத் துரோகிகளைத் தவிர). அந்தவகையில் நாம் யாரும் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதில் அச்சமடையத் தேவையில்லை.

மக்களை அழிப்பதற்காகத்தான் இந்தத் தடுப்பூசி ஏற்றும் திட்டம் என்றால், ஒரு அணுகுண்டு போதும் ஒட்டுமொத்த நாட்டையும் ஒரே நாளில் தரைமட்டமாக்கிவிட. கோடிக் கணக்கில் பணத்தைச் செலவழித்து பல தடவைகள் தோல்வி கண்டும் விடாமுயற்சிகளை மேற்கொண்டு தடுப்பூசிகளைக் கண்டுபிடித்திருக்க வேண்டிய அவசியமில்லை. அதுமட்டுமன்றி அவை ஒவ்வொன்றும் பல்லாயிரம் ரூபாக்கள் மதிப்பு வாய்ந்தவை . பாவப்பட்ட ஜனங்களின் பட்டினியைப் போக்கவே பல யுகங்களுக்கும் மேலாக நாடாளுமன்றத்தை கூட்டி முடிவெடுக்கும் நிலையில் ஒருவரின் உயிரைக் கொல்ல இத்தனை விலை கொடுக்குமா நமது அரசு? பொதுமக்களாகிய நாம் இதைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டாமா?

உலகின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றான ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட மாணவர்களால் கண்டுபிடிக்கப்பட்டதே அஸ்ட்ரா ஜெனெகா தடுப்பூசி. இதுவே கொரோனாவுக்கு எதிராக கண்டுபிடிக்கப்பட்ட முதற்தர தடுப்பூசியாகக் காணப்படுகின்றது. அதுமட்டுமன்றி பைஸர், ஜோன்சன் அண்ட் ஜோன்சன், ஸ்புட்னிக் வி , சினோபோர்ம், மொடர்னா என பல்வேறு பெயர்களில் பலவகைப்பட்ட தடுப்பூசிகள் உலகை வலம் வந்து கொண்டிருக்கின்றன.

இவை ஒவ்வொன்றும் பல்வேறு நாட்டவர்களினதும் கண்டுபிடிப்பாகும். இந்தத் தடுப்பூசிகள் பற்றி பொதுமக்கள் எவ்வாறான பார்வைக் கோணத்தில் அவதானிக்கின்றனர் என நோக்குவோமானால், தடுப்பூசி பற்றிய ஒவ்வொரு தனிமனிதனது நிலைப்பாடும் வேடிக்கையாக உள்ளது. ஒரு சிலர் இது தமிழர்களைத் தீர்த்துக் கட்டுவதற்கான சிங்களவர்களின் சதி என்கின்றனர். ஒரு சிலர் முஸ்லிம்களை அழிப்பதற்கான யூதர்களின் சதி என்கின்றனர். இன்னும் சிலர் கொரோனா வந்து செத்தாலும் சரி, தடுப்பூசியை ஏற்றிக்கொள்ள மாட்டேன் என்கின்றனர். மறுபுறம் ஒரு சிலர் தடுப்பூசி ஏற்றும் இடங்களுக்கு வந்து மணிக்கணக்கில் தவமாய் தவமிருந்து தடுப்பூசியைப் பெற்றுச் செல்கின்றனர். எது எவ்வாறாக இருப்பினும், கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதா? இல்லையா? என முடிவெடுக்கத் தெரிந்தவர்கள் பின்னால் ஏற்படப்போகும் விளைவுகளுக்கு முகங்கொடுக்கவும் தயாராக இருக்கவேண்டும் .

இறுதியாக ஒரு விடயத்தைக் கூறலாம். அதாவது, ஒரு நிமிட சந்தோஷம் ஒரு மனிதனின் நோய் எதிர்ப்பு சக்தியை 14 நாள்களுக்கு அதிகரிக்குமாம். அதேபோல் ஒரு நிமிட கோபம் ஒரு மனிதனின் நோய் எதிர்ப்புச் சக்தியை நான்கு நாள்களுக்குக் குறைத்து விடுமாம்.

அந்தவகையில், கொரோனாத் தடுப்பூசிகள் எம்மைக் காப்பாற்றிவிடுமா என்பதை உறுதியாகக் கூற இயலாது . ஆனால், தடுப்பூசி ஏற்றிய பின்பு, நான் தடுப்பூசி ஏற்றிவிட்டேன். இனி எந்த நோயும் என்னை எதுவும் செய்துவிட முடியாது என்ற சந்தோஷமே எம்மைப் பல நாள்கள் வாழ வைத்துவிடும்.

எனவே, தனித்திருங்கள்; தடுப்பூசியைத் தவற விடாது பெறுங்கள்; விலத்தி இருங்கள்; விளக்கத்தோடு இருங்கள்.